# திருத்தப்படாத முதற் பிரதி

Distr.: General
பெப்ரவரி 25, 2022

மூலப் பிரதி: ஆங்கிலம்

**மனித உரிமைகள் பேரவை**
**49ஆவது அமர்வு**
பெப்ரவரி 28 – ஏப்ரல் 1 2022
நிகழ்ச்சிநிரல் உருப்படி 2
**மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் வருடாந்த அறிக்கை மற்றும் உயர் ஆணையாளர் அலுவலகம் மற்றும் செயலாளர் நாயகம் ஆகிய தரப்புக்களின் அறிக்கைகள்**

## இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துதல்

### மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அறிக்கை*

*சாராம்சம்*

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 46/1 இன் பிரகாரம் இந்த எழுத்து மூலமான இற்றைப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுகின்றது. இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான நிலைமை மற்றும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வரும் சவால்கள் குறித்த அதன் அவதானிப்புக்களை மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் (OHCHR) இங்கு சமர்ப்பிக்கின்றது. அது 2021 பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட உயர் ஆணையாளரின் கடைசி அறிக்கையின் பின்னர் இடம்பெற்றிருக்கும் மாற்றங்கள் மீது, அச்சந்தர்ப்பத்தில் அவதானிக்கப்பட்ட பிரதான போக்குகளையும் உள்ளடக்கிய விதத்தில் கவனம் செலுத்துகின்றது. மேலும், இந்த அறிக்கை தீர்மானம் 46/1 இன் பொறுப்புக்கூறல் சம்பந்தப்பட்ட அம்சங்களை அமுல் செய்வதற்கென எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்த இற்றைப்படுத்தலையும் உள்ளடக்குகின்றது.

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்றிருக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் விடயத்தில் குறிப்பாக 2009ஆம் ஆண்டில் முடிவடைந்த போரின் பின்னர் தோன்றிய உரிமை மீறல்களை அங்கீகரித்தல் தொடர்பாக பொறுப்புக்கூறல் நிலையில் தொடர்ச்சியாக நிலவி வரும் குறைபாடு தொடர்பாக உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். இராணுவமயமாக்கல் மற்றும் இனத்துவ – சமய தேசியவாதம் என்பவற்றை நோக்கிய தொடர்ச்சியான போக்குகளை அவர் எடுத்துக் காட்டுவதுடன், அத்தகைய போக்குகள் ஜனநாயக நிறுவனங்களை உதாசீனம் செய்வதுடன், சிறுபான்மைச் சமூகங்களின் பதற்ற நிலைமைகளை அதிகரித்து நல்லிணக்கத்திற்கு தடையாக இருந்து வருகின்றன. அதே வேளையில், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்துடன் அரசாங்கம் திறந்த மனதுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக காட்டியிருக்கும் அண்மைக் கால புதிய

* உறுப்பு அரசுடன் கலந்துரையாடல்களை நடத்துவதனை இயலச் செய்யும் விதத்தில் இந்த அறிக்கை காலக் கெடுவின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டது.

சமிக்ஞைகளையும், ஒரு சில சீர்த்திருத்தங்களைத் துவக்கி வைப்பதற்கென முன்னெடுக்கப்பட்டிருக்கும் பூர்வாங்க நடவடிக்கைகளையும் உயர் ஆணையாளர் அங்கீகரிக்கின்றார். எவ்வாறிருப்பினும், உண்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறை ஒன்றுக்கான அனைத்துமடங்கிய ஒரு நோக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது எனவும், அதே போல, தண்டனை விலக்குரிமையை முடிவுக்கு கொண்டு வந்து, கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுக்கும் விதத்தில் ஆழமான நிறுவன ரீதியான மற்றும் பாதுகாப்புத் துறைச் சீர்திருத்தங்கள் உடனடியாக தேவைப்படுகின்றது எனவும் உயர் ஆணையாளர் நம்புகிறார்.

# I. அறிமுகம்

1. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றில் ஏற்படும் முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான அதன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் என்பன உயர் அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதன் 49ஆவது அமர்வில் ஓர் எழுத்து மூலமான இற்றைப்படுத்தப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரிடம் (OHCHR) மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 46/1 வேண்டுகோள் விடுத்ததிற்கு இணங்க இந்த எழுத்து மூலமான இற்றைப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுகின்றது.[1] அது 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை தொடர்பான உயர் ஆணையாளரின் இறுதி அறிக்கையின் பின்னர் இடம்பெற்ற மாற்றங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. ஆணையாளர் அச்சந்தர்ப்பத்தில் அடையாளம் கண்டிருந்த பரவலான போக்குகளையும் அது உள்ளடக்குகின்றது. மேலும், இந்த அறிக்கை தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றைச் சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து, பாதுகாத்து வைப்பதற்கான மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் ஆற்றலைப் பலப்படுத்துவதற்கும், எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோருக்கென பரப்புரைகளை மேற்கொள்வதற்கும், தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் உறுப்பு அரசுகளையும் உள்ளடக்கிய விதத்தில் சம்பந்தப்பட்ட நீதித்துறை மற்றும் ஏனைய நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் தேவையான வழிமுறைகள் குறித்த ஓர் இற்றைப்படுத்தலையும் இந்த அறிக்கை உள்ளடக்குகின்றது.[2]

2. இந்த இற்றைப்படுத்தல் தயாரிக்கப்பட்ட காலம் நெடுகிலும் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான விதத்தில் மேற்கொண்டிருந்த தொடர்புகளை மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் பாராட்டுகின்றது. இந்த அலுவலகம் 2021 அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கு கேள்விகளின் ஒரு பட்டியலை அனுப்பி வைத்ததுடன், 2021 டிசம்பர் 8ஆம் திகதி பல பிந்திய இற்றைப்படுத்தல்களுடன் இணைந்த விதத்தில் விரிவான எழுத்து மூலமான உள்ளீடுகளைப் பெற்றுக்கொண்டது.[3] இது தொடர்பான மேலும் கலந்துரையாடல்களை நடத்துவதற்கென 2022 ஜனவரி மாதத்தில் OHCHR தூதுக்குழு ஒன்றின் இலங்கை விஜயத்திற்கும் அரசாங்கம் இணங்கியிருந்தது. எவ்வாறிருப்பினும், ஐரோப்பாவில் நிலவிய கொவிட் - 19 நிலவரம் காரணமாக இந்த விஜயம் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக ஜனவரி 24ஆம் திகதி OHCHR மற்றும் இலங்கை அரசாங்கத்தரப்புக்களுக்கிடையில் இணைய வழியிலான கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. மேலும், OHCHR ஏனைய பல பங்கீடுபாட்டாளர்களையும் சந்தித்தது. இந்த கருத்துப் பரிமாற்றங்களின் திறந்த மற்றும் விரிவான விடயம் சார்ந்த இயல்பை OHCHR பாராட்டுகின்றது. கருத்துக்களைக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்கும் பொருட்டு இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

3. அதற்கான காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சம கால அடிமைத்துவ வடிவங்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் 2021 நவம்பர் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 03ஆம் திகதி வரையில் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். [4] மேலும், கல்வி உரிமை தொடர்பான விசேட

[1] A/HRC/RES/46/1, para 16.

[2] Ibid, para 6.

[3] Note Verbale (NV) 457/2021, 8 December 2021 (thereafter NV 457/2021) and Note Verbale 16/2022 (information from Office for Reparations) from the Permanent Mission of Sri Lanka in Geneva.

[4] End of mission statement by the Special Rapporteur on contemporary forms of slavery, 3 December 2021,

அறிக்கையாளரின் இலங்கை விஜயம் ஒன்றுக்கும் அரசாங்கம் இணங்கியிருந்தது. ஆனால், இனிமேல் தான் அந்த விஜயம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 2021 பெப்ரவரி 5ஆம் திகதி 10 விசேட நடைமுறை தரப்புக்கள் 2015 ஆம் ஆண்டிற்கும் 2019ஆம் ஆண்டிற்கும் இடையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயங்களையடுத்து முன்வைத்த பரிந்துரைகளை நினைவுபடுத்தி, ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருந்தன.[5] 2021ஆம் ஆண்டின் போது விசேட நடைமுறைத் தரப்புக்கள் இலங்கைக்கு ஒன்பது தொடர்பாடல்களை அனுப்பி வைத்திருந்தன; 2022 பெப்ரவரி 14ஆம் திகதி வரையில் அரசாங்கம் இவற்றில் 5 தொடர்பாடல்களுக்கு எதிர்வினையாற்றியிருந்தது.[6]

## II. பின்புலம்

4. இலங்கை 2020ஆம் ஆண்டு தொடக்கம் கொவிட் - 19 பெருந்தொற்றின் பல அலைகளைச் சந்தித்திருந்ததுடன், அவை பொதுச் சுகாதாரம், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் ஆகியவற்றின் மீது பன்முக பரிமாணங்களைக் கொண்டிருந்த மனித உரிமைகளில் தாக்கத்தையெடுத்து வந்திருந்தது. இலங்கை அனைவருக்கும் இலவச சுகாதாரப் பராமரிப்பை வழங்கி வருவதுடன், அரசாங்கம் உயர் அளவிலான தடுப்பூசி ஏற்றல் விகிதம் ஒன்றை சாதித்துக் கொண்டுள்ளது; பல்வேறு ஊக்குவிப்புக்கள் மற்றும் பொருளாதார ஆதரவு வழிமுறைகள் என்பவற்றையும் அது அமுல் செய்துள்ளது. எவ்வாறிருப்பினும், நீடித்த பொது முடக்கங்கள் மற்றும் பிரயாணத் தடைகள் என்பன சுற்றுலாத் துறை, ஆயத்த ஆடைகள் துறை, சேவைகள் மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகள் மீது பாதிப்பை எடுத்து வந்துள்ளன. அதே போல, ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்படும் பண வரத்துக்கள் என்பன வீழ்ச்சியடைந்துள்ளன. மேலும், எதிரில் உருவாகி வரும் நிதிக் கடன் நெருக்கடியைக் கையாள்வதற்கென அமுல் செய்யப்பட்ட கொள்கைகள் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள், நாணயப் பெறுமதி இறக்கம், பண வீக்கம், உணவு மற்றும் எரிபொருள் போன்றவற்றின் தீவிர அதிகரிப்பு பல்வேறு பொருளாதார மற்றும் சமூக பின்விளைவுகளை எடுத்து வந்துள்ளன.[7]

5. உலக வங்கியின் பிரகாரம், பெருந்தொற்று ஆரம்பித்த பின்னர் பிரதானமாக முறைசாராத் துறை தொழிலாளர்கள் வேலை செய்து வரும் துறைகள், நுண்மட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் என்பவற்றில் பரவலான வேலை மற்றும் நேர இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதுடன் இணைந்த விதத்தில் சுமார் 500,000 மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் சென்றிருக்க முடியும்.[8] முறைசாராத ஆயத்த ஆடை, புடவை உற்பத்தித் துறைகளின் ஊழியர் படையில் பெண்கள் கணிசமான சதவீதத்தினராக இருந்து வரும் நிலையில், அவர்கள் தொழில் இழப்பு மற்றும் வருமான இழப்பு என்பவற்றினால் மற்றவர்களிலும் பார்க்க விகித சமனற்ற விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.[9] இலங்கையின் பெருந்தொகையான குடிபெயர்

https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=27895&LangID=E.

[5] https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=26725&LangID=E.

[6] Available from https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36694; and https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36775; https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36580; https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36496; https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36539).

[7] Sri Lanka Overview: Development news, research, data | World Bank.

[8] SriLanka-DevUpd-Apr9.pdf (worldbank.org), page 27.

[9] Ibid; See Research brief: The supply chain ripple effect: How COVID-19 is affecting garment workers and factories in Asia and the Pacific (ilo.org).

தொழிலாளர்களும் தாம் தொழில் செய்து வரும் அனுசரணை நாடுகளில் தமது தொழில்களை இழந்திருப்பதுடன், அது நாட்டின் பண வரத்துக்கள் வருமானத்தைப் பாதித்துள்ளது.[10]

6. பொருளாதார நிலவரங்கள் உணவுப் பாதுகாப்பின் மீது தாக்கத்தை எடுத்து வந்துள்ளன: 44 சதவீதமான குடும்பங்கள் உணவு தொடர்பான கரிசனையைக் கொண்டிருப்பதாக உலக வங்கியின் மதிப்பீட்டாய்வு சுட்டிக்காட்டியிருந்தது.[11] சேதன விவசாயத்தை மேம்படுத்தும் பொருட்டு உர வகைகளின் பாவனையின் மீது ஒரு தடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், எதிர்ப்புக்களையடுத்து அது திரும்பப் பெறப்பட்டது. இந்தத் தடையும் உணவு உற்பத்தியின் மீது தாக்கத்தையெடுத்து வந்திருந்தது. உயர் உணவு விலைகள், அத்தியாவசிய பண்டங்களில் நிலவி வரும் தட்டுப்பாடு என்பவற்றுக்கு மத்தியில் வியாபாரிகள் ஊக வியாபார நடைமுறைகளை மேற்கொள்வதனை தடுப்பதற்கெனக்கூறி ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கம் புதிய அவசர கால ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்து வைத்தது. இவை இப்பொழுது காலாவதியாகியுள்ளன.[12]

7. பொருளாதார நிலைமை மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகள் என்பன தொடர்பான அதிருப்தி காரணமாக எதிர்ப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இதற்கு எதிர்வினையாற்றும் விதத்தில் அரசாங்கம் தனிமைப்படுத்தல் விதிமுறைகள், ஏனைய சட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் கொவிட் - 19 வழிமுறைகளை வலுவுக்கிட்டது. பல்வேறு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஆட்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், ஒரு சில சந்தர்ப்பங்களில் எதிர்ப்பாளர்களைக் கைது செய்து, குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் இந்த வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் இடம்பெற்றிருந்தன.[13] பொதுச் சுகாதார விடயத்தின் அடிப்படையில் இது அவசியமாக இருந்து வருகின்றது என அரசாங்கம் வலியுறுத்துகின்றது. எவ்வாறிருப்பினும், எதிர்ப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்கென பொலிஸார் தடை உத்தரவுகளை வழங்க வேண்டுமென பல தடவைகள் வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், கருத்துச் சுதந்திரம் அல்லது அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் என்பவற்றை எடுத்துக்காட்டி நீதிமன்றங்கள் அத்தகைய தடை உத்தரவுகளை வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தன.

8. இணைய வெளியில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், கொவிட் - 19 அல்லது உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஏனைய விடயங்கள் தொடர்பாக சமூக ஊடகங்களில் ''பொய்யான செய்திகளைப்'' பரப்புபவர்களைக் கைது செய்வதற்கும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் (CID) ஒரு விசேட அணியை உருவாக்கியிருப்பதாக 2021 யூன் மாதத்தில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்தார்.[14]

9. ''இணைய வழி பொய்கள் மற்றும் தந்திரமான செயற்பாடுகள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பளித்தல்'' தொடர்பான ஒரு புதிய சட்டத்தின் வரைவைத் தயாரித்து வருவதாக அரசாங்கம் OHCHR இடம் தெரிவித்தது.[15] இத்தகைய வகையைச் சேர்ந்த சட்டங்கள் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, அபிப்பிராயம் மற்றும் தகவல் உரிமை என்பவற்றைப் பயன்படுத்துவதன் மீது பாரதூரமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்; மேலும், இந்தப் புதிய சட்டத்தை உருவாக்கும் பொழுது சிவில் சமூகப்

[10] talking economics - Repatriation and Replacement of Lost Foreign Jobs: Handling Labour Migration in Sri Lanka during COVID-19 (ips.lk).

[11] Sri Lanka Overview: Development news, research, data | World Bank.

[12] Extraordinary Gazette 2243/1 of 30 August 2021 and Extraordinary Gazette 2243/3 Emergency (Provision of Essential Food) Regulation No. 1 of 2021.

[13] See joint communication from UN Special Rapporteurs, AL LKA (4.2021), 17 August 2021.

[14] https://www.themorning.lk/no-warrant-needed-for-fake-news-arrests/.

[15] NV 457/2021, page 11.

பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன ஊடகங்கள் ஆகிய தரப்புக்களுடன் முழுமையாக கலந்தாலோசனை செய்யப்படும் விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஐ நா மனித உரிமைகள் பொறிமுறைகளினால் இது தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அவதானிப்புக்களைக் கவனமான விதத்தில் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் உயர் ஆணையாளர் அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றார்.

## A. மனித உரிமைகள் மீது பாதிப்புச் செலுத்தும் சட்ட மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள்

10. உயர் ஆணையாளர் முன்னைய அறிக்கையில் குறிப்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் உள்ளடக்கிய விதத்தில் நீதித்துறை மற்றும் சுயாதீனமான நிறுவனங்கள் என்பவற்றுக்கு நியமனங்களை மேற்கொள்ளும் செயன்முறையை மாற்றியமைத்த அரசியல் யாப்புக்கான 20ஆவது திருத்தத்தையடுத்து, இலங்கையின் முதன்மையான நிறுவனங்களின் சுயாதீனம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது என எச்சரிக்கை விடுத்திருந்தார்.[16]

11. தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான உலகளாவிய கூட்டமைப்பு (GANHRI) ஒரு விசேட மீளாய்வினை அடுத்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தரம் A இலிருந்து B இக்கு மூன்று காரணங்களின் அடிப்படையில் தரமிறக்கப்பட வேண்டுமென 2021 நவம்பர் மாதத்தில் பரிந்துரை செய்திருந்தது: வெளிப்படையான, சுயாதீனமான நடைமுறை ஒன்று இல்லாதிருத்தல்; பன்மை இயல்பு மற்றும் பன்மைத்துவம் என்பன இல்லாதிருத்தல்; மனித உரிமைகள் தொடர்பான தனது பணிப்பாணையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாகவும், வினைத்திறன் மிக்க விதத்திலும் நிறைவேற்றிவைக்கத் தவறியமை.[17] உச்ச நீதிமன்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க 2021 டிசம்பர் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமனம் செய்யப்பட்டார்.

12. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்தின அதன் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருப்பதனையடுத்து முக்கியமான முடிவுகளை வழங்கியிருக்கும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் சுயாதீனம் உதாசீனம் செய்யப்படும் என்றும் உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். முன்னைய அறிக்கைகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, நீதிபதி அபேரத்தின அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்டிருப்பதுடன் அந்த ஆணைக்குழு பல ''குறியீடு சார்ந்த'' மனித உரிமை வழக்குகளில் நீதிமன்ற நடைமுறைகளுக்கு இடையூறு விளைவித்து, அவற்றில் தலையீடுகளை மேற்கொண்டிருந்தது.[18]

13. ஒரு புதிய அரசியல் யாப்பு வரைவைத் தயாரிப்பதற்கென தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் செயன்முறை இலங்கையில் மனித உரிமைகளின் பாதுகாப்பு, முதன்மையான, நிறுவனங்களின் சுயாதீனம் மற்றும் குடித்தொகையில் அனைத்து உறுப்பினர்களும் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை முழுமையாக அனுபவிப்பதன் ஓர் உள்ளார்ந்த பாகமாக இருந்து வருவதாக'' மனித உரிமைகள் பேரவை குறிப்பிட்டிருக்கும் அரசியல் அதிகாரப் பகிர்வு என்பவற்றை பொறுத்தவரையில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை உயர் ஆணையாளர் வலியுறுத்துகிறார்.[19] அரசாங்கத்தினால் நியமனம்

[16] A/HRC/46/20, para. 24.

[17] GANHRI Sub-Committee on Accreditation Report – October 2021, December 2021, page 31 https://www.ohchr.org/Documents/Countries/NHRI/GANHRI/SCA-Report-October-2021_E.pdf.

[18] HRC/46/20, paras. 26 and 27.

[19] A/HRC/RES/25/1, 9 April 2014.

செய்யப்பட்டிருக்கும் நிபுணர்களின் ஒரு கமிட்டி அரசியல் யாப்பு வரைவு ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பதுடன், பொது மக்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என அது கேட்டுக் கொண்டுள்ளது. கடந்த பல வருடங்களாக மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் தொடர்பாக ஐ நாவின் பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறையினால் முன்வைக்கப்பட்டு வந்திருக்கும் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை இந்த அரசியல் யாப்பில் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டுமென உயர் ஆணையாளர் கேட்டுக்கொள்கிறார். மேலும், இந்த வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் பொது மக்களின் கலந்தாலோசனை மற்றும் விவாதம் என்பவற்றுக்கு முன்வைக்கப்பட வேண்டுமென அவர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறார்.[20]

## B. இராணுவமயமாக்கல் மற்றும் காணிப் பிரச்சினைகள்

14. முன்னைய அறிக்கைகளில் அவதானிக்கப்பட்டுள்ளவாறு, கடந்த இரண்டு வருட காலப் பிரிவின் போது இலங்கையின் சிவில் அரசாங்கக் கருமங்கள் அதிகரித்த அளவில் இராணுவமயமமாக்கப்பட்டு வந்துள்ளன.[21] செயல்திறனை விருத்தி செய்தல், சட்டத்திற்கு இணங்கி ஒழுகும் விதத்தில் செயற்படுதல் என்பவற்றின் அடிப்படையில் அரசாங்கம் இந்த நியமனங்களை நியாயப்படுத்தி வருகின்றது. எவ்வாறிருப்பினும், சிவில் பதவிகள் இராணுவ அதிகாரிகளின் கைகளில் ஒன்றுதிரண்டிருப்பது ஜனநாயக ஆளுகை மற்றும் அரசின் நீண்ட கால இயல்பு என்பவற்றைப் பாதிக்கின்றது என்பது தொடர்பாக ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார்.

15. பாதுகாப்பு அமைச்சில் மட்டுமன்றி மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த ஒரு சிலரையும் உள்ளடக்கிய விதத்தில் தற்போதைய மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலர் வெளி விவகாரம், பொது மக்கள் பாதுகாப்பு, நிதி, சுகாதாரம், வன ஜீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய பல அமைச்சுக்களில் அதிகாரப் பதவிகளை வகித்து வருகின்றனர். அரசு சாரா அமைப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தும் செயலகம் வெளிவிவகார அமைச்சரிடம் மாற்றப்பட்டிருந்த போதிலும், ஊடகங்கள் தொடக்கம் குடியகல்வு வரையில் ஆகக்குறைந்தது 31 முகவரகங்களைப் பாதுகாப்பு அமைச்சு தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது. உதாரணமாக, 2021 ஆகஸ்ட் மாதத்தில் உணவுப் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடுகள் என்பவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு அவசர கால ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்வதற்கென மேஜர் ஜெனரல் ஒருவர் அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டார்.[22] இராணுவத் தளபதி சவேந்திர சில்வா இயற்கை உர வகைகளை மேம்படுத்தி, விநியோகிப்பதற்கான ஜனாதிபதியின் 'பசுமை விவசாய செயற்பாட்டு நிலையத்திற்கு' நியமனம் செய்யப்பட்டுள்ளார்.[23]

16. "பொலிஸ் கருமங்களைப் பலப்படுத்தப்பட வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஆயுதப் படைகளின் செயற்பாட்டிற்கு அதிகாரமளிக்கும்" பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் ஜனாதிபதி தொடர்ந்தும் வர்த்தமானி அறிவித்தல்களைப் புதுப்பித்து வெளியிட்டு வந்துள்ளார்.[24] அத்தகைய கட்டளைகள் சட்டத்தை அமுலாக்குவதில் இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறையொன்றை தொடர்ந்து முன்னெடுத்துவருவதுடன், இராணுவத்தின் வகிபங்கை பொலிஸ் கருமங்கள் வரையில் விரிவுபடுத்துகின்றன. வட மாகாணத்தில் உயர் எண்ணிக்கையிலான இராணுவ சோதனைச் சாவடிகள் செயற்பட்டு

[20] Note Verbale 64/22, 22 February 2022 (NV 64/22), para 24.

[21] A/HRC/43/19, para 33; HRC/46/20, paras 20-23.

[22] G 34894 (E) (I-I) Appointment by Presi.pmd (documents.gov.lk).

[23] President orders setting up of Green Agriculture Operations Centre | Daily News.

[24] NV 64/2022, para 27; for instance, see Extraordinary Gazette 2259/2 of 20 December 2021, 2259-02_E.pdf, (presidentsoffice.gov.lk).

வருவதாகவும், குறிப்பாக, பெண்கள் தொடர்பான பாதுகாப்புச் சோதனைகளின் போது பாரபட்சமான விதத்தில் நடத்துதல் அல்லது துன்புறுத்துதல் தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

17. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் பிடித்து வைத்திருந்த காணிகளின் விடுவிப்பு, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் மிக முக்கியமான ஒரு கூறாக இருந்து வந்துள்ளது. 2009 ஆம் ஆண்டிலிருந்து 2021 அக்டோபர் 31ஆம் திகதி வரையில் ஆயுதப் படைகளினால் விடுவிக்கப்பட்ட மொத்த தனியார் காணிகளின் பரப்பளவு 2,601,796 ஏக்கர்களாக அல்லது 92.42 சதவீதமாக இருந்து வருவதாகவும், மேலும் 53 ஏக்கர்களை (0.19%) விடுவிப்பதற்கென உத்தேசிக்கபட்டிருப்பதாகவும் அரசாங்கம் அறிக்கையிடுகின்றது. [25] எவ்வாறிருப்பினும், பௌத்த மரபுரிமைப் பாதுகாப்பு அல்லது வன வளப் பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் காணித் தகராறுகளின் ஒரு புதிய போக்கு தோன்றியிருப்பதுடன், அது குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் பல இனங்களும் வாழ்ந்து வரும் சூழலில், அப்பிராந்தியத்தின் மரபுரிமை விடயத்தில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு மத்தியில் பதற்றங்களைத் தோற்றுவித்துள்ளது.

18. கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்திற்கான ஒரு செயலணி 2020 யூன் மாதம் தொடக்கம் பாதுகாப்புச் செயலாளரின் தலைமையின் கீழ் தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகார சபை, வன ஜீவராசிகள் திணைக்களம், பொலிஸ், இராணுவம் மற்றும் பௌத்த பிக்குமார் ஆகிய தரப்பு என்பவற்றுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. தொல்லியல் சின்னங்களை அடையாளம் காணுதல், பௌத்த அமைவிடங்களில் திருத்த வேலைகளைச் செய்தல் அல்லது நிர்மாணித்தல் என்பவற்றுக்கென இச்செயலணி செயற்பட்டு வருகின்றது. மேலும், சூழல் மற்றும் வன வளப் பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் அரசாங்கம் இப்பிரதேசங்களில் காணிப் பாவனை தொடர்பாக வரையறைகளை விதித்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் பிராந்தியத்தின் இன வரைபியல் தொகுப்பை மாற்றியமைப்பதற்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றது எனச் சிறுபான்மைச் சமூகங்கள் அச்சம் தெரிவித்து வருகின்றன. இது வாழ்வாதாரங்கள் மீது தாக்கங்களை எடுத்து வந்து, புதிய முரண்பாடுகளுக்கான நிலைமைகளை அதிகரிக்க முடியும்.

19. அரச செயற்பாட்டாளர்கள் மற்றும் சிறுபான்மைச் சமூகங்கள் ஆகிய தரப்புக்களுக்கிடையிலான காணிப் பிரச்சினைகள் தொடர்பான அத்தகைய 45 தகராறுகள் குறித்த அறிக்கைகளை 2021 ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையில் OHCHR பதிவு செய்துள்ளது. உதாரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேசச் செயலகப் பிரிவில் 11 இடங்களில் அமைந்துள்ள சுமார் 340.33 ஏக்கர் காணி ஏழு பௌத்த நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு / பன்சலகளுக்கு 30 வருட காலப் பிரிவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. [26] திருகோணமலை மாவட்டத்தில் தென்னமரவாடிப் பிரதேசத்தில் தொல்லியல் திணைக்களம் 358 ஏக்கர் பரப்பளவு நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது என 2020 செப்டம்பர் மாதம் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. தொல்லியல் அமைவிடங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இக்காணிகளுக்கு தமிழ் விவசாயிகள் உரிமை கோரியுள்ளனர்.

[25] NV 457/2021, page 24.

[26] Notification under State Land Regulation No. 21(2),http://documents.gov.lk/en/gazette.php.

## C. அதிகரித்து வரும் பேரினவாதம் மற்றும் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பவற்றின் மீதான அதன் தாக்கங்கள்

20. செப்டம்பர் மாதம் பொதுச் சபையின் 76 ஆவது அமர்வில் நிகழ்த்திய உரையில் ‘‘அனைத்து இலங்கையர்களுக்கும் இனம், மதம் அல்லது பால் வேறுபாடுகள் எவையும் இல்லாத விதத்தில் வளமான, உறுதியான, பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் உறுதியான எதிர்பார்ப்பை’’ ஜனாதிபதி ஊர்ஜிதப்படுத்தியிருந்தார். [27] எவ்வாறிருப்பினும், கடந்த ஆண்டின் போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் சிங்கள தேசியவாதம், பௌத்த மதம் மற்றும் அரசு என்பவற்றுக்கிடையிலான கூட்டை வலியுறுத்தியதுடன், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சிறுபான்மை சமூகங்களுக்கு மத்தியில் புறமொதுக்கப்படும் உணர்வு மற்றும் பதற்ற நிலை என்பவற்றை அதிகரித்து, நல்லிணக்கத்திற்கான வாய்ப்பை உதாசீனம் செய்திருந்தன.

21. ‘ஒரே நாடு – ஒரே சட்டம்’ எண்ணக்கருவை அமுல் செய்வதற்கான ஒரு சட்டகத்தை உருவாக்கி, பரிந்துரைகளை முன்வைப்பதற்கான பணிப்பாணையுடன் ஜனாதிபதி 2021 அக்டோபர் மாதம் ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமனம் செய்தார். இந்த விடயம் அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு வாக்குறுதியாக முன்வைக்கப்பட்டிருந்தது. அந்தச் செயலணி 2022 பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. முஸ்லிம் எதிர்ப்பு சொல்லாடல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பன தொடர்பாக நன்கு அறியப்பட்டிருக்கும் ஒரு பௌத்த தீவிரவாத அமைப்பான பொதுபல சேனா (BBS) அமைப்பின் தலைவரான பிக்கு ஞானசார தேரரரை ஜனாதிபதி சர்ச்சைக்குரிய விதத்தில் அதன் தலைவராக நியமனம் செய்திருந்தார். கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையினைத் தூண்டினார் என ஞானசார தேரர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. உதாரணமாக, 2014 அளுத்கம மற்றும் 2018 திகன ஆகிய இடங்களில் அவ்விதம் வன்முறையைத் தூண்டியதாக கூறப்பட்டிருந்தது.[28] 2018 ஆகஸ்ட் மாதம் புறம்பான ஒரு சம்பவத்தில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு ஆறு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், 2019 மே மாதத்தில் அவர் ஜனாதிபதி மன்னிப்பைப் பெற்றுக்கொண்டார்.

22. அரசியல் யாப்பு இலங்கையை ஏற்கனவே ஓர் ஒற்றை அரசாக (உறுப்புரை 2) அங்கீகரிப்பதுடன், சட்டத்தின் முன்னால் பிரஜைகளின் சமத்துவத்தையும் அங்கீகரிக்கின்றது (உறுப்புரை 12). ஆனால் ‘‘ஒரே நாடு – ஒரே சட்டம்’’ என்ற எண்ணக்கரு மாகாண மட்டத்துக்கான அரசியல் அதிகாரப் பகிர்வு மற்றும் சட்டவாக்க அதிகாரங்களின் பகிர்வு என்பன தொடர்பாகத் தாக்கங்களை எடுத்து வர முடியும். மேலும், அது திட்டவட்டமான ஒரு சில வழமைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பல்வேறு சமூகங்களுக்கு இடமளித்திருக்கும் வழக்காறுசார் தனியார் சட்டங்களின் தொகுப்புக்கள் மீதும், இலங்கைச் சமூகத்தின் பன்முக அடையாளங்களின் பல்வகைமை இயல்பைப் பாதுகாத்துக் கொள்வதிலும் தாக்கம் செலுத்த முடியும். இன்று இச்சட்டங்கள் வட மாகாணத் தமிழர்களுக்குப் பிரயோகிக்கப்படும் தேசவழமைச் சட்டம், கண்டிய சிங்களவர்களுக்கான திருமண, வாரிசுரிமைச் சட்டகத்தை வழங்கும் கண்டியச் சட்டம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் என்பவற்றின் வடிவில் இருந்து வருகின்றன. இந்த மூன்று சட்ட முறைகளும் காணி, மரண சாசனம் எழுதப்படாத சொத்துக்களின் பின்னுரித்தையும் உள்ளடக்கிய விதத்தில் வாரிசுரிமை, திருமணம் மற்றும் விவாகரத்து விடயங்களை முதன்மையாக

[27] https://www.un.int/srilanka/news/president-addresses-general-debate-76th-session-general-assembly-un-new-york-21-27-september.

[28] OHCHR, “Sri Lanka: Pillay alarmed by intercommunal violence, calls for end to hate speech”, 16 June 2014.

கவனத்தில் எடுக்கின்றன. ஆனால், அவை முக்கியமான அடையாள அடிப்படையிலான குறியீட்டுப் பெறுமதியையும் கொண்டுள்ளன.

23. நிதி அமைச்சரினால் நியமனஞ் செய்யப்பட்டிருந்த முஸ்லிம் சட்ட சீர்திருத்த ஆலோசனை கமிட்டி, தற்போதைய சர்வதேச தர நியமங்களுடன் பொருந்திச் செல்லக் கூடிய விதத்தில் 1951 இன் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம், பொது திருமணங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் சிவில் நடைமுறைக் கோவை என்பவற்றைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்திருப்பதாக அரசாங்கம் புறம்பான விதத்தில் OHCHR இடம் தெரிவித்துள்ளது.[29] சட்டவரைஞ்ஞர் இப்பொழுது திருத்தகங்ளைத் தயாரித்துவருகின்றார். இந்தத் திருத்தங்கள், ஏனையவற்றுடன் முஸ்லிம்கள் தொடர்பாகக் குறைந்தபட்ச திருமண வயதை 18 வயதாக ஆக்குவதுடன், காதி நீதிமன்ற உறுப்பினர்களுக்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளை அறிமுகம் செய்து வைக்கும் என்றும், பெண் உறுப்பினர்களை உள்வாங்குவதற்கான சாத்தியத்தைக் கொண்டிருக்கும் என்றும், பொதுச் சட்டங்களின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான தெரிவை முஸ்லிம்களுக்கு வழங்கும் என்றும், தெரிவிக்கப்பட்டிருக்கிறது.[30] சர்வதேச மனித உரிமைகள் தரநியமங்களுடன் இணைந்த விதத்தில் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் உரிமைகளைப் பலப்படுத்தும் எந்தவொரு முற்போக்கு இயல்பிலான சீர்த்திருத்தங்களையும் உயர் ஆணையாளர் வரவேற்பதுடன், இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகத்துடன், குறிப்பாக பெண்களுடன் உச்ச மட்டத்திலான கலந்தாலோசனைகளை மேற்கொள்ள வேண்டுமென ஊக்குவிக்கின்றார்.

24. 2021ஆம் ஆண்டில் இராணுவம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகிய தரப்புக்களின் அனுசரணையுடன் இணைந்த விதத்தில் குறியீட்டு அமைவிடங்களில் புதிய புத்த கோவில்கள், சிலைகள் மற்றும் வணக்கஸ்தலங்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டன. நீதிமன்ற உத்தரவையும் மீறி உருவாக்கப்பட்ட புத்த சிலை ஒன்றை தேசிய மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் புராதன இந்து ஆலயம் ஒன்றின் அமைவிடத்தில் இச் சிலை அங்குராப்பணம் செய்யப்பட்டது.[31] அநுராதபுரத்தில் இராணுவ ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்ட ஒரு புதிய ஸ்தூபா ''போர் வீரர்களுக்கான'' ஒரு காணிக்கையாக 2021 நவம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டது. போரை இனத்துவ – சமய அடிப்படையில் சித்தரித்துக் காட்டும் கதையாடல்களை அது மீண்டும் வலியுறுத்துகின்றது.[32] பௌத்த பிக்கு ஒருவர் 2021 நவம்பர் மாதம் நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனமான கொழும்பு பல்கலைக்கழத்தின் வேந்தராக நியமனஞ் செய்யப்பட்டமைக்கு அது மதச்சார்பற்ற நிலை மற்றும் கல்வித் துறையின் சுயாதீனம் என்பவற்றை உதாசீனம் செய்கின்றது என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் அதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

25. முஸ்லிம் சமூகத்தின் மீது ஏற்றத்தாழ்வான விதத்தில் பாதிப்புக்களை எடுத்துவரக் கூடிய கொள்கைச் சீர்திருத்தங்களை அரசாங்கத்தின் பல புள்ளிகள் முன்வைத்துள்ளார்கள். கொவிட் - 19 காரணமாக மரணமடைபவர்களின் உடல்களைப் பலவந்தமாக தகனம் செய்யும் கொள்கையை அரசாங்கம் 2021 பெப்ரவரி மாதம் ரத்து செய்தது; எவ்வாறிருப்பினும், அடக்கஸ்தல அமைவிடம் வெகு தொலைவில் அமைந்திருக்கும் நிலை மரணத்தினால் துயருற்றிருக்கும் குடும்பங்களுக்கு நடைமுறை ரீதியான சவால்களை எடுத்து வருகின்றன. மயானபூமிக்கு

29 NV 457/2021, page 13.

30 Ibid.

31 State Minister of National Heritage installs Buddha statute on Vimeo; Antiquities excavation in North, East: Work commences on 10 sites - The Morning - Sri Lanka News.

32 https://www.army.lk/news/gigantic-%E2%80%98sanda-hiru-seya%E2%80%99-offered-maha-sangha-immortalizing-memories-%E2%80%98ranaviru%E2%80%99-sacrifices

செல்வதற்கு அல்லது சடங்குகளை நடத்துவதற்கு அவர்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதனால் இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. புர்க்கா மற்றும் நிக்காப் போன்ற ஆடைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான ''சமய தீவிரவாதத்தின்'' அடையாளங்களாக இருந்து வருவதாகக் கூறி, அத்தகைய ஆடைகளைத் தடை செய்வதற்கான ஒரு யோசனையை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர முன்வைத்திருந்தார்.[33] முகத்தை அடையாளம் காண்பதைத் தடுக்கும் முகக் கவசங்கள் மீதான உத்தேச தடை அனைத்து சமூகங்களுக்கும், ஆண் பெண் இருபாலாருக்கும் பிரயோகிக்கப்படும் என அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.[34] நாட்டில் மாடுகள் வெட்டப்படுவதனைத் தடை செய்வதற்கான ஒரு முன்மொழிவுக்கு 2021 அக்டோபர் மாதத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது (இது பெருமளவுக்கு முஸ்லிம் கசாப்புக் கடைகாரர்களால் நடத்தப்பட்டு வரும் ஒரு செயற்பாடாகும்). இந்த யோசனைகள் முன்னெடுக்கப்படவோ அல்லது அமுல் செய்யபடவோ இல்லை. இருந்த போதிலும், அவை முஸ்லிம் எதிர்ப்பு சொல்லாடல்களுக்கான ஒரு சூழ்நிலை தோன்றுவதற்கு பங்களிப்பு செய்திருப்பதுடன், முஸ்லிம் சமூகம் அனுபவித்து வரும் அன்னியமாதல் உணர்வை மேலும் அதிகரித்துள்ளது.

26. கிறிஸ்தவ விவிலிய நூல் பிரச்சாரப் பிரிவினரையும், கத்தோலிக்கம் சாராத தேவாலயங்களையும் இலக்காகக் கொண்டு நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து அறிக்கையிடப்பட்டு வந்துள்ளன. அரசாங்க அதிகாரிகள் அல்லது ஏனைய தொழில்துறை உறுப்பினர்கள் ஆகியோரினால் மத போதகர்கள் அச்சுறுத்தப்படுதல் அல்லது துன்புறுத்தப்படுதல் மற்றும் வணக்கஸ்தலங்களில் குழப்பங்கள் விளைவிக்கப்படுதல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. [35]

## D. சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரைப் பயமுறுத்துதல் மற்றும் அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல்

27. சிவில் சமூக அமைப்புக்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய தரப்புக்கள் மீதான தொடர் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் மாதிரி முன்னைய அறிக்கைகளில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. குறிப்பாக, நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அந்த தொடர் கண்காணிப்பு, துன்புறுத்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன. மனித உரிமைகள் பாதுகாவலர்கள், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்கு எதிராகப் பாதுகாப்புச் சேவைகளினால் நடத்தப்பட்டு வரும் பயமுறுத்தல் அவர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் தொடர் கண்காணிப்பு என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்கள் OHCHR இக்கு தொடர்ந்து கிடைத்த வண்ணம் உள்ளன. அவ்விதம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட தேசிய பொறிமுறைகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்திக் கூறுகின்றது. [36]

28. விசாரணைகளுக்கென பொலிஸார் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்களின் அலுவலகங்களுக்கு அல்லது வீடுகளுக்கு அடிக்கடி வந்துள்ளார்கள்; அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ளார்கள். அவர்களுடைய ஆளணியினர் மற்றும் பண உதவி வழங்குபவர்களின் வங்கிக் கணக்கு விபரங்கள், வெளிநாட்டுத் தொடர்புகள், பிரயாண வரலாறு அல்லது சமூக ஊடக கணக்குகளின் கடவுச் சொற்கள் என்பன தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, 2021 டிசம்பர் மாதத்தில் பொலிஸ் பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவு (TID) வட மாகாணத்தில் செயற்பட்டு வரும் குறைந்தது நான்கு நிறுவனங்களின்

[33] Niqab included in proposed ban - The Morning - Sri Lanka News.

[34] NV 64/22, para 50.

[35] A faith-based organisation reported 77 incidents against freedom of religion in 2021.

[36] NV 64/22, para 53.

ஊழியர்களுடன் ‘தொடர்பு கொண்டு, பல மணித்தியாலம் அவர்களிடம் விசாரணை செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் அவர்களுக்கு நிதியளிப்புக்களை வழங்கி வந்திருக்கும் அமைப்புக்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும், பயனாளிகள் தொடர்பான விபரங்களை வழங்க வேண்டுமெனவும் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதிப்படுத்தலை வழங்குதல் என்பவற்றை தடுத்து நிறுத்துவதற்கு அத்தகைய உன்னிப்பான ஒரு பரிசீலனை அவசியமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை அரசாங்கம் வலியுறுத்துகின்றது.

29. சிவில் சமூக அமைப்புக்களின் - குறிப்பாக, வடக்கு கிழக்கில் செயற்பட்டு வரும் அமைப்புக்களின் இயங்கு தளம் பல்வேறு விதமான வரையறைகளை எதிர்கொண்டுள்ளது. தொடர் கண்காணிப்பு மற்றும் உன்னிப்பான பரிசோதனை என்பன இல்லாத விதத்தில் வேலை செய்ய முடியாதுள்ளது என்றும், எந்தவொரு செயற்பாடு தொடர்பாகவும் மாவட்ட செயலகத்திற்கு அறிவித்து, ஒப்புதலை பெற வேண்டியுள்ளது என்றும் அமைப்புக்கள் அறிக்கையிடுகின்றன. உள சமூக ஆதரவு போன்ற பண்டங்கள், சேவைகள் விநியோகத்துடன் சம்பந்தப்படாத ஒரு சில வேலைப் பரப்புக்கள் குறிப்பாக தடுக்கப்பட்டு வருகின்றன. நிதிகளை விடுவிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களிலிருந்து ஒப்புதலை பெற்றுக் கொள்ள வேண்டுமென வங்கிகள் தம்மிடம் கூறி வருவதாக சிவில் சமூக அமைப்புக்கள் OHCHR இடம் தெரிவித்துள்ளன. இது சிவில் சமூக அமைப்புக்களைப் பொறுத்தவரையில் நிர்வாக ரீதியான தடங்கல்களை விதித்து வருகின்றது.

30. நன்கு பிரபல்யமான மற்றும் மதிப்புக்குரிய சிவில் சமூகப் பிரதிநிதிகளினால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் பரப்புரைச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்தின் அண்மைய பகிரங்க எதிர்வினைகள் குறித்து உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். அவற்றை எல்ரீரீஈ இயக்கத்தின் பிரச்சாரங்களுடன் ஒப்பிடும் விதத்தில் இந்த எதிர்வினைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. கடந்த காலத்தில் அவ்விதம் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள், இலங்கை மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மீது, மனித உரிமைகள் பேரவையுடனான அவர்களது இடைத்தொடர்புகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒரு கடுமையான தாக்கத்தை எடுத்து வந்திருந்தன.

31. சிவில் சமூக அமைப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தி வரும் அரச சாரா அமைப்புக்கள் தொடர்பான தேசிய செயலகத்தை (NGO Secretariat) 2021 நவம்பர் மாதத்தில் பாதுகாப்பு அமைச்சிலிருந்து வெளி விவகார அமைச்சிற்கு மாற்றியமையை ஒரு சாதகமான மாற்றமாக உயர் ஆணையாளர் கவனத்தில் எடுக்கின்றார். இது தற்போதைய பாதுகாப்புமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையிலிருந்து ஒரு அடிப்படை மாற்றத்திற்கு வழிகோலும் என்றும், சிவில் சமூகத்திற்கு மேலும் இயலுமையுடன் கூடிய ஒரு சூழலை மேம்படுத்தும் என்றும் அவர் நம்புகிறார்.[37] 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சுயவிருப்பிலான சமூக சேவைகள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை) சட்டத்திற்கான ஓர் உத்தேசத் திருத்தம் தொடர்பாக ஏற்கனவே கலந்தாலோசனைகளை ஆரம்பித்திருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.[38]

32. பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் அதிகாரிகள் தரப்பிலிருந்து தொடர்ந்தும் துன்புறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் என்பவற்றை எதிர்கொண்டு வருகின்றார்கள் எனக் குறிப்பிட்டு OHCHR க்கு பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. உளவுத் துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடிக்கடி அவர்கள் இருக்கும் இடங்களுக்கு விஜயம் செய்து எதிர்ப்புச் செயற்பாடுகள் அல்லது நினைவேந்தல்கள் தொடர்பாக விசாரணை செய்தல், அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான அவர்களுடைய கடந்த காலத் தொடர்புகள் குறித்து விசாரணை செய்தல் என்பவற்றுக்கான பன்முக விஜயங்களையும் இது உள்ளடக்குகின்றது. அது தவிர,

37 Gazette notification No. 2254/30 dated 17 November 2021.

38 NV 64/22, para 64.

புனர்வாழ்வளிக்கப்பட்ட எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் அல்லது அவர்களுடைய குடும்பத்தினர்கள் அல்லது போர் இடம்பெற்ற காலத்தில் எல்ரீரீஈ இயக்கத்துடன் ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களாக கருதப்படும் எந்தவொரு நபரும் தொடர்ச்சியான கண்காணிப்பின் இலக்குகளாக இருந்துவருகின்றார்கள். நீதிக்காக பரப்புரை செய்பவர்களில் பலர் தப்பிப்பிழைத்த பெண்களாக அல்லது குடும்ப உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர்; அவர்கள் பாதுகாப்புப் படைகள் மற்றும் அதிகாரிகள் ஆகிய தரப்புக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது மேலதிக பலவீன நிலையை எதிர்கொண்டு வரும் ஒரு பின்புலத்தில் இந்தக் கொள்கைகளின் பால்நிலை பரிமாணங்கள் குறித்து உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். குறிப்பாக, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் குறிப்பாக, அடி மட்டத்தைச் சேர்ந்த பெண்களினால் வழிநடத்தப்பட்டு வரும் குழுக்கள், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டின் முக்கியமான பங்காளர்களாக கருதப்படுதல் வேண்டும். சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை அணிதிரட்டுவதற்கும், பரப்புரைகளை முன்னெடுப்பதற்கும் அவர்களுக்கு இடமளிக்கப்படுதல் வேண்டும்.

33. பாதிக்கப்பட்டவர்கள் குழுக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகிய தரப்புக்கள் அமைதியான விதத்தில் நிகழ்வுகள் மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகள் என்பவற்றை நடத்த முன்வரும் பொழுது அதிகாரிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கும் சம்பவங்களும் இருந்து வந்துள்ளன. முள்ளிவாய்க்காலில் போர் நினைவேந்தல் நிகழ்வொன்றை 27 தனிநபர்கள் ஏற்பாடு செய்வதனைத் தடுக்கும் பொருட்டு 2021 மே மாதம் பொலிஸார் 27 தனிநபர்களுக்கெதிராக தடை உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அடுத்த தினம் நீதிமன்றம் அந்தத் தடை உத்தரவைத் திருத்திய போதிலும், முள்ளிவாய்க்கால் மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் பொது முடக்கம் அமுல் செய்யப்பட்டதுடன், இராணுவம் பாதைத் தடைகளை ஏற்படுத்தியது. காணாமற் போன ஆட்களின் குடும்பங்கள் சங்கத்தின் தலைவி மீது அவர்கள் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் என்பவற்றில் பங்கேற்பதனை தடுக்கும் விதத்தில் 2021 செப்டம்பர் மாதத்தில் ஒரு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டது. 2021 டிசம்பர் மாதத்தில் மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்கென கண்டியில் ஓர் உள்ளூர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வை நிறுத்தும் பொருட்டு பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அதில் பல்வேறு இனக்குழுக்களுக்கு மத்தியில் ‘ஒற்றுமைக் குலைவை’ ஏற்படுத்தும் என்ற காரணம் குறிப்பிடப்பட்டிருந்தது.

## E. தடுப்புக் காவல் மரணங்கள், சித்திரவதை மற்றும் ஏனைய வகையிலான துன்புறுத்தல்

34. கொவிட் - 19 பெருந்தொற்றின் பின்னணியில் சிறைச்சாலைகளில் மிதமிஞ்சிய அளவில் ஆட்கள் அடைக்கப்பட்டிருப்பதனைக் குறைத்துக் கொள்வதற்கென – குறிப்பாக வழக்கு விசாரணைக்கு முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கென - மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை உயர் ஆணையாளர் வரவேற்கிறார். அதன் விளைவாக சிறைச்சாலைகளில் இருப்பவர்களின் எண்ணிக்கை 2020 அக்டோபர் மாதத்தில் 32,000 இலிருந்து 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி 18,903 ஆகக் குறைவடைந்திருப்பதாக அரசாங்கம் அறிக்கையிடுகின்றது.[39] பிணை வழங்கும் நடைமுறையை அதிகரிக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழு நீதிபதிகளுக்குப் பணிப்புரைகளை வழங்கியிருப்பதுடன், சிறு அளவிலான போதைப் பொருட்களை வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்ட ஆட்கள் சிறையில்

[39] NV 64/2022, para 68.

அடைக்கப்படுவதனைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென சட்ட மா அதிபர் பொலிஸாருக்குப் பணிப்புரைகளை வழங்கியிருக்கின்றார்.[40]

35. தடுப்புக் காவலில் மீண்டும் மீண்டும் மரணங்கள் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் குறித்தும், பொலிஸாருடன் ஆயுத மோதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்தும் உயர் ஆணையாளர் பாரதூரமான விதத்தில் கரிசனைகளைக் கொண்டுள்ளார். உதாரணமாக, தனிமைப்படுத்தல் விதியை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த முஹமட் அலிக்கான் என்பவர் யூன் 6 ஆம் திகதி கொழும்புக்கு அருகில் பாணந்துறை, வத்தல்பொல என்ற இடத்தில் பொலிஸ் தடுப்பிலிருக்கும் பொழுது உயிரிழந்துள்ளார். ஓடிக் கொண்டிருந்த பொலிஸ் வாகனத்திலிருந்து அவர் குதித்துள்ளார் என பொலிஸ் அறிக்கையிட்டுள்ளது; எவ்வாறிருப்பினும், அவர் பொலிஸாரினால் அடித்துக் கொல்லப்பட்டார் என அவருடைய குடும்பத்தினர் குற்றம் சாட்டுகின்றனர். 2021 யூன் மாதத்தில் மட்டக்களப்பிலும், 2021 அக்டோபர் மாதம் மன்னாரிலும் (முறையே) போதைப் பொருள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக எனக்கூறி கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் (சந்திரன் விதுசன் மற்றும் ரம்சான்) ஒரு சில மணித்தியாலங்களுக்குள் உயிரிழந்துள்ளார்கள். ஒரு கும்பல் தலைவனான லலித் வசந்த பின்டோ என்ற நபர் 2021 ஜூலை 18 ஆந் திகதி விசேட அதிரடிப் படையினரால் கொல்லப்பட்டார். கைது செய்யப்படுவதை அவர் தடுக்க முயன்ற பொழுது இவ்விதம் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. 2022 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ராஜபக்ஷ முதியன்சேலாகே மெனிக்கே என்பவர் கொழும்புக் கோட்டையில் அமைந்திருக்கும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் (CID) ஐந்தாவது மாடியிலிருந்து கீழே குதித்த போது உயிரிழந்துள்ளார். அவர் அங்கு மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்; அப்பெண்மணி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

36. குறைந்தது இரு சந்தர்ப்பங்களில் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் தனியார் சட்டத்தரணிகள் ஆகிய தரப்புக்கள் தடுத்து வைக்கப்பட்டவர்களின் உயிருக்கு ஆபத்து இருந்து வரும் விடயத்தை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர் என்ற விடயம் குறித்து உயர் ஆணையாளர் அதிர்ச்சியடைந்துள்ளார். உதாரணமாக, நவம்பர் 16ஆம் திகதி ஹேமா லுனுவிலகே லசந்த என்ற நபர், மற்றொரு குற்றத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சுடுகலன்களை மீட்பதற்கென அழைத்துச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் களுத்துறையில் கொல்லப்பட்டார். அவர் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கிய சந்தர்ப்பத்திலேயே அவ்விதம் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. அதற்கு ஒரு தினத்திற்கு முன்னர் லசந்தவின் சட்டத்தரணி சட்டத்தரணிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தனது கட்சிக்காரரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். அதன் அறிக்கையில் நிச்சயமாக கொல்லப்படக்கூடிய ஆபத்துக் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்ததாக அந்த அறிக்கை ஊர்ஜிதம் செய்திருந்தது. மேலும், இந்தச் சம்பவம் 'நீதித்துறை நடைமுறைக்கு புறம்பான விதத்திலான ஒரு கொலைக்கான அடையாளங்களைக் கொண்டிருப்பதாக' அது குறிப்பிட்டிருந்தது.[41] அதே போன்ற மற்றொரு சம்பவத்தில் மாலன் மாபுலா மற்றும் தாரக பெரேரா விஜேசேகர என்ற இரண்டு நபர்கள் முறையே மே 11 மற்றும் 12 ஆகிய தினங்களில் மேல் மாகாணத்தில் நவகமுவ என்ற இடத்திலும், மீன்காவ என்ற இடத்திலும் கொல்லப்பட்டார்கள். விசாரணையில் உதவுவதற்கென அவர்கள் தடுப்புக் காவலிலிருந்து வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட பொழுது இச்சம்பவங்கள் நிகழ்ந்தன.

37. 2021 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 30 திகதி வரையில் ஒன்பது தடுப்புக் காவல் மரணங்கள் இடம்பெற்றிருப்பதாகவும், அது தொடர்பாக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது குற்றம்

[40] NV 457/2021, page 19.

[41] STATEMENT: KILLING OF A SUSPECT IN POLICE CUSTODY - BASL.

சாட்டப்பட்டிருப்பதாகவும், தடுப்புக்காவல் மரணங்கள் தொடர்பாக ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அரசாங்கம் OHCHR யிடம் தெரிவித்திருந்தது.[42] ஆனால், எந்தச் சம்பவங்கள் தொடர்பாக அந்த உத்தியோகத்தர்கள் மீது அவ்விதம் குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்ற விடயம் தெளிவாகத் தெரியவில்லை.[43] இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக தனிநபர் பொறுப்புக்களை ஏற்கச் செய்வதற்கும், குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் மேலதிகமாக, இந்தச் சம்பவ மாதிரிகளை அடையாளம் கண்டுகொள்வதற்கும், பொலிஸ் சேவைக்குள் பதவி வரிசை கட்டளைப் பொறுப்பு இருந்து வருகின்றதா என்பதனைத் தெரிந்து கொள்வதற்கும் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படுதல் வேண்டும்.

38. பொலிஸாரினால் நடத்தப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதை என்பன தொடர்பான பல குற்றச்சாட்டுக்கள் 2021 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தன. மிதமிஞ்சிய அளவில் போதைப்பொருட்களை உட்கொண்டமையினால் யூன் மாதம் 3 ஆந் திகதி பொலிஸ் காவலில் மரணித்ததாக கூறப்படும் சந்திரன் விதுசன் என்பவரின் குடும்பத்தினர், பொலிஸார் அவரை மரத்தில் கட்டி தடிகளினால் கடுமையாகத் தாக்கியதாக குற்றம் சாட்டியுள்ளார்கள். இராணுவ ஆளணியினரால் நடத்தப்படும் துன்புறுத்தல் மற்றும் சித்திரவதை என்பன தொடர்பான சம்பவங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன. உதாரணமாக, 2021 டிசம்பர் 22ஆம் திகதி இலங்கை இராணுவ உத்தியோகத்தர்கள் தன்னை மிக மோசமாக தாக்கியதாக கடற்தொழிலாளி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார். நவம்பர் 27ஆம் திகதி ஊடகவியலாளர் ஒருவர் முள்ளிவாய்க்கால் வீதியோரத்தில் இருக்கும் பெயர் பலகையைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த பொழுது இலங்கை இராணுவ ஆளணியினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பயங்கரவாத தடைச்சட்ட தடுப்புக்காவல் கைதிகளின் சட்டத்தரணிகள் வவுனியா ஜோசப் முகாமில் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் பொழுது சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் என்பன இடம்பெறுவதாக அறிக்கையிட்டுள்ளார்கள்.

39. சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சர் 2021 செப்டம்பர் மாதம் நண்பர்கள் குழுவொன்றுடன் கொழும்பு சிறைச்சாலை ஒன்றுக்குள் பலவந்தமாக பிரவேசித்து கைதிகளை தூக்கிலிடும் கம்பத்தை அவர்களுக்கு காட்டியதாகவும், பின்னர் அநுராதபுரத்தில் இருக்கும் ஒரு சிறைச்சாலைக்குச் சென்று, பயங்கரவாதகத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு தமிழ் கைதிகளைத் துப்பாக்கி முனையில் மண்டியிடச் செய்து, அவர்களைக் கொலை செய்வதாக அச்சுறுத்தியதாகவும் பரவலாக அறிக்கையிடப்பட்டிருந்தது. சிறைச்சாலை அமைச்சர் பதவியிலிருந்து ரத்வத்த ராஜினாமாச் செய்தார். இருப்பினும் இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் ராஜாங்க அமைச்சர் பதவியை அவர் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

40. சித்திரவதையை தடுக்கும் ஒரு வழிமுறை என்ற விதத்தில் அரசாங்கம் எடுத்துக் காட்டும் ஒரு விடயமாகவும், பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை நேரடியாக பார்ப்பதற்கும், அவர்கள் கைதின் போதும் அல்லது அதன் பின்னரும் சித்திரவதைக்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்களா என்பதை பரீட்சிப்பதற்கும் மாஜிஸ்ட்ரேட் நீதவான்கள் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்ய வேண்டியதை அவசியப்படுத்தும் விதத்தில் குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தப்பட்டுள்ளது என்பதாகும்.[44] வரையறுக்கப்பட்ட நேரம் மற்றும் ஆற்றல் என்பன காரணமாக இந்த மாற்றுப் பரீட்சிப்பு முறையை அமுலாக்கம் செய்வது கடினமாக இருந்து வரும் என கரிசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதே வேளையில், சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தின் மேலதிக ஏற்பாட்டின் கீழான தேசிய

[42] NV 457/2021, page 22.

[43] Ibid, page 23.

[44] Ibid, page 16.

தடுப்புப் பொறிமுறையை ஸ்தாபித்து, செயற்படுத்துவதற்கான நடவடிக்கையில் இதுவரையில் எந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. 2016ஆம் ஆண்டில் சித்திரவதைக்கு எதிரான கமிட்டி இலங்கை தொடர்பாக முன்வைத்திருந்த விரிவான அவதானிப்புக்களை உயர் ஆணையாளர் நினைவு கூர்ந்து, அந்த பரிந்துரைகளை அமுல் செய்வதற்கு திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக் கொள்கிறார்.[45]

## F. பயங்கரவாத தடைச்சட்டம்

41. பயங்கரவாத தடைச் சட்ட திருத்த மசோதா 2022 பெப்ரவரி 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அனைத்துமடங்கிய விரிவான ஒரு சட்டவாக்கம் உருவாக்கப்படுவதை நோக்கிய ஆரம்பப் பணிகளாக இவை இருந்து வருவதாக இலங்கை அரசாங்கம் தெரிவிக்கின்றது. பூர்வாங்க படிமுறையின் முக்கியத்துவத்தை உயர் ஆணையாளர் அங்கீகரிப்பதுடன், தடுப்புக்காவல் இடங்களுக்கு விஜயம் செய்வதற்கான மாஜிஸ்ட்ரேட் நீதவான்களின் அதிகாரங்களை அதிகரித்தல், வழக்குளை விரைவுபடுத்துதல், அதே போல பிரசுரங்கள் தொடர்பாக மிகவும் பாரதூரமான வரையறைகளை விதிக்கும் பிரிவு 14 ஐ நீக்குதல் போன்ற உத்தேச திருத்தங்களையும் கவனத்தில் எடுக்கிறார். எவ்வாறிருப்பினும், உத்தேச திருத்தங்களின் ஏனைய பாகங்கள் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் முழுமையாக இணங்கி ஒழுகுபவையாக இருந்து வரவில்லை. மேலும், தன்னிச்சையான தடுத்து வைப்பு மற்றும் சித்திரவதை என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு வழிகோலிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் பெருமளவுக்கு பிரச்சினைக்குரிய ஒரு சில ஏற்பாடுகள் இன்னமும் அவ்வாறே இருந்து வருகின்றன. பயங்கரவாதம் தொடர்பான மேலோட்டமான, தெளிவற்ற ஒரு வரைவிலக்கணத்தையும் இவை உள்ளடக்குகின்றன. இதன் விளைவாக சட்டம் பாரபட்ச இயல்பில் அல்லது தன்னிச்சையான விதத்தில் பிரயோகிக்கப்பட முடியும். இச்சட்டத்தின் மற்றும் சில பிரச்சினைக்குரிய ஏற்பாடுகள் வருமாறு: ஒரு சட்டத்தரணியின் பிரசன்னம் இல்லாத நிலையில் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளிடம் வழங்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் ஏற்புத் தன்மை, இத்தகைய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளில் நீதிமன்றங்களில் ஆரம்ப சான்றுகளாகப் பயன்படுத்தப்படுதல். 12 மாதங்கள் வரையில் நிர்வாகரீதியான மற்றும் வழக்குக்கு முன்னரான தடுத்துவைத்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதிலிருந்து தண்டனை விலக்குரிமை வழங்குவதற்கான ஏற்பாடுகள் என்பன சர்வதேச மனித உரிமை தர நியமங்களுடன் இணங்கி ஒழுகுபவையாக இருந்து வரவில்லை.

42. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாக பல வருட காலம் ஐ நா மனித உரிமைகள் பொறிமுறைகளினால் முன்வைக்கப்பட்டிருக்கும் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை முழுமையாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம் ஆகிய தரப்புக்களிடம் ஆணையாளர் கேட்டுக்கொள்கிறார். ஏழு விசேட நடைமுறை பணிப்பாணை தாரர்கள் 2021 டிசம்பர் 9ஆம் திகதி அனுப்பி வைத்த தொடர்பாடலில் அடையாளம் காணப்பட்டிருந்த ஐந்து அளவுகோல்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். அவை சர்வதேசச் சட்டத்தின் கடப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகக்கூடிய விதத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தப்படுவதனை உத்தரவாதப்படுத்துவதற்கு ‘‘தேவையான முன்நிபந்தனைகளாக’’ இருந்து வருகின்றன என அவர்கள் கருதுகின்றனர்.[46]

43. அதே வேளையில், அரசாங்கம் தொடர்ந்தும் இச்சட்டத்தின் கீழ் ஆட்களைத் தடுத்து வைத்து, புலன் விசாரணை நடத்தி, வழக்குத் தாக்கல்

[45] A/HRC/34/54/Add.2, paras 115-122.

[46] OL LKA (7.2021).

செய்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இணங்கி ஒழுகும் ஒரு சட்டத்தின் மூலம் பிரதியீடு செய்யப்படும் வரையில் அரசாங்கம் அச்சட்டத்தின் பாவனையை இடைநிறுத்த வேண்டுமென தான் விடுத்திருந்த வேண்டுகோளை உயர் ஆணையாளர் மீண்டும் வலியுறுத்துகின்றார். அரசாங்கத் தரவுகளின் பிரகாரம் 2021 டிசம்பர் மாதம் 2ஆம் திகதி அளவில் 333 ஆட்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 16 பேருக்கு குற்றத்தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், 11 பேர் மேன்முறையீடுகளைச் செய்துள்ளார்கள். ஏனையவர்கள் சந்தேக நபர்கள் என்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.[47] யூன் 24ஆம் திகதி தொடக்கம் 81 பயங்கரவாதத் தடைச் சட்ட தடுப்புக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.[48] மிக முக்கியமான பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளில் ஒன்றான, 18 மாத காலத்திற்கு மேல் இச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னப் ஜசீம் 2021 டிசம்பர் 15ஆந் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். 2020 ஏப்ரல் 14ஆம் திகதி தொடக்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு 2022 பெப்ரவரி 7ஆந் திகதி உயர் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டது.

44. 2021 யூன் மாதத்தில் அநேகமாக தமது தண்டனைக் காலத்தை முடித்துக் கொள்ளும் நிலையிலிருந்த 16 பயங்கரவாதத் தடைச்சட்டக் கைதிகள் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார்கள். 2021 ஆகஸ்ட் 24ஆம் திகதி ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் ஒருவரின் தலைமையின் கீழ் ஜனாதிபதி மூன்று உறுப்பினர் ஆலோசனை சபை ஒன்றை நியமனம் செய்தார். தடுப்புக் காவல் கைதிகள் அல்லது அவர்களுடைய பிரதிநிதி மீளாய்வுக்கென இந்தச் சபையிடம் விண்ணப்பம் செய்ய முடியும்.[49]

45. போரினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் சமூக வலைத்தள பதிவுகளைப் பகிர்ந்து கொண்டமைக்காக ஆகக்குறைந்தது 70 பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவர்களின் அந்தப் பதிவுகளில் எல்ரீரீஈ படங்கள் அல்லது தமிழ் தேசியவாத அடையாளச் சின்னங்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன. மே 18 ஆம் திகதி ஒரு நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காக பொலிஸார் மட்டக்களப்புக்கு அருகில் 10 ஆட்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள். இறுதியில் டிசம்பர் 8ஆம் திகதி அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். ஊடகவியலாளரான முருகுப்பிள்ளை கோகிலதாசன் அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் எல்ரீரீஈ இயக்க தலைவரின் புகைப்படங்களைக் காட்சிப்படுத்தியமை தொடர்பாக 2020 ஆவது ஆண்டு நவம்பர் தொடக்கம் 15 மாத காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பொலிஸ்மா அதிபரினால் 2021 அக்டோபர் மாதம் 23 ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்ட படிப்புரை ஒன்றை அரசாங்கம் OHCHR க்கு உடன் வழங்கியிருந்தது. அது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாவனையை வரையறை செய்வது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவதுடன், படங்களை தம்வசம் கொண்டிருந்தமை போன்ற சம்பவங்களை மதிப்பிடும் பொழுது உயரளவிலான தற்றுணிவைப் பிரயோகிக்க வேண்டுமெனவும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.[50]

46. 2021 மார்ச் மாதத்தில் "தீவிரவாதத்தை தடுக்கும்" புதிய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டன. அந்த ஒழுங்குவிதிகள் வன்முறையுடன் கூடிய தீவிரவாதம் தொடர்பாகப் புனர்வாழ்வளித்தல் நோக்கங்களுக்னெ எத்தகைய வழக்கு விசாரணைகளும் இல்லாமல் இரண்டு வருட காலம் வரையில் தனிநபர்களைத் தன்னிச்சையான நிர்வாக தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு அனுமதி

47 NV 457/2021, page 15.

48 NV 64/2022, para 80.

49 The Advisory Board is envisaged in section 13 of the PTA, but it was never established.

50 NV 457/2021, page 15.

வழங்குகின்றன.[51] பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் அதே வேளையில், மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் என்பவற்றை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான ஐ நா விசேட அறிக்கையாளரும், ஏனைய நிபுணர்களும் இந்த ஒழுங்குவிதிகள் தன்னிச்சையான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்களின் - குறிப்பாக சமய மற்றும் இனத்துவ சிறுபான்மையினரின் - உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றை பங்கப்படுத்த முடியும் என்றும், வினைத்திறன் மிக்க உரிய செயன்முறைக்கான உத்தரவாதங்கள் எவையும் இல்லாத நிலையில் அரசியல் ரீதியான எதிர்ப்புச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த முடியும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.[52] அந்த விதிமுறைகளை அமுலாக்குவது தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்கள் ஒரு தடை உத்தரவு பெற்றுக்கொண்டிருப்பதுடன், இந்த ஒழுங்குவிதிகளுக்கு எதிரான அடிப்படை உரிமை மனு ஒன்றை உச்ச நீதிமன்றம் பரிசீலனைக்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

# III. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றில் முன்னேற்றம்

## A. நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள்

47. பிரேரணை 40/1 சம்பந்தப்பட்ட பிரரேரணைகள் 34/1 மற்றும் 30/1 என்பன தொடர்பான இணை அனுசரணையிலிருந்து வெளியேறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்த பொழுது ‘‘அனைவரையும் உள்ளடக்கிய உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, நிறைவேற்றப்படும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் செயன்முறை’’[53] ஒன்றை முன்னெடுத்துச் செல்லும் அதன் நோக்கத்தை வெளிப்படுத்தியது. இரண்டு வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை நோக்கிய நிலைமாறு கால நீதி தொடர்பான நம்பகமான புதிய பாதை வரைபடம் ஒன்றை இதுவரையில் அரசாங்கம் முன்வைத்திருக்கவில்லை. ‘‘இலங்கையின் முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும், அவற்றின் பிரேரணைகளின் அமுலாக்க நிலையை மதிப்பீடு செய்வதற்கும், புதிய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்கிய விதத்தில் அவற்றை அமுல் செய்வதற்கும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை உத்தேசிப்பதற்கென’’ 2020 நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியினால் ஒரு விசாரணை ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. அது அதன் இரண்டாவது இடைக்கால அறிக்கையை 2022 பெப்ரவரி மாதம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது.[54]

48. முன்னைய அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இரு நிலைமாறு கால நீதி கட்டமைப்புக்கள், காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் (OMP) மற்றும் இழப்பீடுகள் அலுவலகம் (OFR) - தொடர்ந்தும் இருந்து வருகின்றன. எவ்வாறிருப்பினும், அவற்றின் அங்கத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்களையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் அவை கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

49. 2021 டிசம்பர் மாதத்தில் காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்திற்கு புதிய தலைவரும், ஆணையாளர்களும் நியமனம் செய்யப்பட்டார்கள். அரசாங்கத்தின் கருத்தின் பிரகாரம், காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் 2000 ஆம் தொடக்கம் 2020 வரையிலான அதன் முதலாவது கட்டத்தின் போது கிடைத்திருக்கும் 6,025 முறைப்பாடுகளை சரிபார்த்து வருகின்றது. அத்துடன் 6,025 கோப்புக்களை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கென சம்பந்தப்பட்ட அதிகார

---

[51] Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka No. 2218/68, March 12, 2021, http://www.documents.gov.lk/files/egz/2021/3/2218-68_E.pdf.

[52] OL LKA (3.2021).

[53] Human Rights Council, forty-third session, High Level Segment statement by Hon. Dinesh Gunawardena, Minister of Foreign Relations of Sri Lanka, 26 February 2020.

[54] Annex to NV 64/22.

அமைப்புக்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.[55] 4,200 முறைப்பாடுகள் தொடர்பாக மேலும் ஆவணங்கள் தேவைப்படுவதாக காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் நிர்ணயித்ததுடன், அவர்களுடைய சம்பவங்கள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கும் பொருட்டு மேலும் விபரங்களை வழங்க வேண்டுமென 3,230 குடும்பங்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளது. விசாரணைகளை நடத்துவதற்கும், குடும்பங்களுக்கு இல்லாமை சான்றிதழை அல்லது மரணச் சான்றிதழை வழங்குவதற்கும் அந்த அலுவலகத்திற்கு இயலுமையை வழங்கும் பொருட்டு 2021 நவம்பர் மாதம் நான்கு விசாரணைக் குழுக்களை ஸ்தாபித்திருப்பதாக அரசாங்கம் அறிக்கையிட்டுள்ளது.[56] இந்த சரி பார்க்கும் நடவடிக்கை உண்மையை ஸ்தாபிப்பதற்கும், குடும்பங்களுக்கு, நீதி மற்றும் நிவாரணம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்துமடங்கிய ஒரு அணுகுமுறையை பின்பற்றுவதற்கு பதிலாக, கோப்புக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, முடித்துக் கொள்ளும் நோக்கத்துடன் இந்த சரிபார்க்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவது குறித்து OHCHR கரிசனை கொண்டுள்ளது.

50. காணாமற் போன ஆட்களின் குடும்பங்கள் - பெரும்பாலான குடும்பங்கள் பெண்களையே அதிகம் கொண்டிருக்கும் நிலையில் - தொடர்ந்து அபாயகரமான நிலையிலிருந்து வருவது குறித்து ஆணையாளர் பாரதூரமான விதத்தில் கரிசனை கொண்டுள்ளார். தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனையும், அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதனையும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவர்கள் அனுபவித்து வரும் துன்பம் மற்றும் துயரம் என்பன தவிர, அவர்களுடைய வாழ்க்கையின் மீது இது எடுத்து வந்திருக்கும் மோசமான பொருளாதார மற்றும் சமூகப் பின்விளைவுகளுடன் அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள். கொவிட் - 19 அவர்களுடைய பொருளாதாரச் சிரமங்களை மேலும் அதிகரித்திருப்பதுடன், அவர்களை மேலும் தனிமைப்படுத்தியுள்ளது. இந்தப் பின்புலத்தில் பாதுகாப்பு முகவரகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் துன்புறுத்தல் மற்றும் தொடர் கண்காணிப்பு மற்றும் அவர்களுடைய செயற்பாடுகள் தடுக்கப்படுதல் என்பன அவர்கள் எதிர்கொண்டு வரும் அநீதியை மேலும் தீவிரப்படுத்துகின்றன. காணாமற் போன ஆட்களின் குடும்பத்தினர் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், அவர்களுடைய துன்பங்களை அங்கீகரிக்குமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அல்லது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விடயத்தை அவசரமாக நிர்ணயிக்க வேண்டும் என்றும், உரியவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கி, குற்றமிழைத்த நபர்களை நீதியின் முன்னால் எடுத்துவர வேண்டும் என்றும் ஆணையாளர் அரசாங்கத்திடம் வலிந்து கேட்டுக்கொள்கிறார்.

51. 2021ஆம் ஆண்டில் இழப்பீட்டு அலுவலகத்திற்கு 800 மில்லியன் இலங்கை ரூபா (அமெரிக்க டொலர் 3.96 மில்லியன்) ஒதுக்கப்பட்டது; முடிவாக்கப்பட்டிருக்கும் கோரல்களுக்கு பணம் செலுத்துவதற்கென இத்தொகை வழங்கப்பட்டிருந்தது. அந்த அலுவலகத்தின் தகவல்களின் பிரகாரம் அத்தொகையில் இலங்கை ரூபா 400 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.[57] துரதிர்ஷ்டவசமாக, நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பாக OHCHR இக்கு கிடைக்கும் தரவுகள் போதிய அளவில் வெவ்வேறு பிரிவுகளின் கீழ் பிரித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, மனித உரிமை மீறல்களுக்குப் பொருந்தக் கூடிய கொடுப்பனவுகள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை. இழப்பீட்டுக் கொள்கை பெப்ரவரி 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.[58] வாழ்வாதாரம் மற்றும் உள சமூக ஆதரவுகளுக்கென இழப்பீடுகள் அலுவலகம் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்து வருவதாக அரசாங்கம் OHCHR க்கு தெரிவித்தது.

55 NV 457/2021, page 7.

56 Ibid.

57 Office for Reparations, ‘Compensation – update as at Jan. 2022,’ (NV 16/22).

58 NV 457/2021, page 8.

52. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR) நாடெங்கிலும் தொடர்ந்தும் சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயலமர்வுகளையும், செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்துள்ளது.[59] இந்த அலுவலகம் "தேசிய சுகப்படுத்தல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உபாய ரீதியான ஒரு பாதை வழிகாட்டியை" சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றுடனான கலந்தாலோசனை செயன்முறை ஒன்றுக்கூடாக அபிவிருத்தி செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.[60] அனைத்துமடங்கிய நிலைமாறு கால நீதி வழிமுறைகளின் பக்கபலத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் மட்டுமே நல்லிணக்கத்தை சாதித்துக்கொள்ள முடியும் என்ற விடயத்தை உயர் ஆணையாளர் வலியுறுத்துகின்றார். நல்லிணக்க வழிமுறைகள் குறித்த கலந்தாலோசனை செயலணியினால் ஏற்கனவே நடத்தப்பட்டிருக்கும் தேசிய கலந்தாலோசனைகள் குறித்த அறிக்கையை நினைவூட்டும் உயர் ஆணையாளர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய பங்கீடுப்பாட்டாளர்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களுகான மிக முக்கியமான ஒரு வழிகாட்டியாக அது இருந்து வருகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.[61]

## B. குறியீட்டு வழக்குகள் தொடர்பான தண்டனை விலக்குரிமை

53. நீதிமன்றங்களுக்கு எடுத்து வரப்பட்டிருக்கும் பல குறியீட்டு ரீதியிலான மனித உரிமைகள் வழக்குகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலை தொடர்ந்து நிலவி வருவது குறித்தும், சில சந்தர்ப்பங்களில் ஒரு சில படிகள் அவை பின்னோக்கிச் சென்றிருப்பது குறித்தும் ஆணையாளர் பாரதூரமான விதத்தில் கரிசனை கொண்டுள்ளார். 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் 11 பேர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதில்லை என 2021 ஆகஸ்ட் மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்தது. கரன்னாகொட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவை தாக்கல் செய்திருந்ததுடன், தன் மீது தவறான விதத்தில் குற்றம் சாட்டப்பட்டது என்ற அடிப்படையில் ஓர் இடைக்கால நிவாரணமாக ஒரு தடை உத்தரவையும் பெற்றுக்கொண்டிருந்தார்.[62] பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்தத் தீர்மானத்திற்கு சவால் விடுத்திருப்பதுடன், 2022 ஏப்ரல் மாதத்தில் இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.[63] அதே வேளையில், ஏனைய 14 கடற்படை ஆளணியினருக்கு எதிரான வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெறவிருப்பதுடன்,[64] அந்த நிலையில் கரன்னாகொட 2021 டிசம்பர் மாதத்தில் வட மேல் மாகாணத்தின் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார். மற்றொரு குறியீட்டு வழக்கான 2005 டிசம்பர் மாதம் நத்தார் தினத்தன்று பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஐவர் தொடர்பாகவும் தொடர்ந்து வழக்கு நடவடிக்கையை முன்னெடுக்கப் போவதில்லையென சட்டமா அதிபர் 2021 ஜனவரி மாதத்தில் மட்டக்களப்பு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

54. 2012 ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி வெலிக்கட சிறைச்சாலையில் 27 கைதிகளின் மரணத்தை விளைவித்த சம்பவங்களில் கொலையையும் உள்ளடக்கிய விதத்தில், கொலையை நிகழ்த்துவதற்கான சூழ்ச்சி தொடர்பாக 33 குற்றச்சாட்டுகள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களின் வழக்கு தொடர்பான தீர்ப்பு 2022 ஜனவரி மாதம் 12ஆம்

[59] Ibid, page 28.
[60] Ibid.
[61] See http://war-victims-map.org/wp-content/uploads/2017/02/CTF-Final-Report-Volume-I-Nov-16.pdf.
[62] NV 13/2022, 20 January 2022.
[63] NV 64/2022, 22 February, para 97.
[64] NV 457/2021, page 2.

திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.[65] முதலாவது குற்றவாளியான போதைப் பொருள் பணியகத்தின் பொலிஸ் இன்ஸ்பெக்ட்டர் நியோமல் ரங்கஜீவ அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். இரண்டாவது குற்றவாளியான வெலிக்கட மகசின சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் லமாஹேவகே எமில் ரஞ்சன் குற்றவாளியாக காணப்பட்டு, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மூன்றாவது குற்றவாளியான சிறைச்சாலைகள் உளவுப் பிரிவில் பணியாற்றி வரும் உத்தியோகத்தர் ஒருவரான இந்திக்க சம்பத் தலைமறைவாகியிருப்பதுடன், அவர் இல்லாத நிலையில் அவருக்கு எதிரான வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படும். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த ஏனைய பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

55. 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குல்களினால் பாதிக்கப்பட்டவர்களும், சமயத் தலைவர்களும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த தாக்குல்களுக்கு இடமளித்த முழுமையான சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்த - குறிப்பாக பாதுகாப்புத் துறை வகிபங்கையும் உள்ளடக்கிய விதத்தில் - முழுமையான ஒரு விபரம் வழங்கப்பட வேண்டுமென்றும் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இந்தத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான பெறுபேறுகள் பிரசுரிக்கப்படவில்லை. ஆனால், முதன்மையான அதிகாரிகளுக்கு எதிராக குற்றவியல் குற்றங்கள் சாட்டப்பட வேண்டுமென அது பரிந்துரை செய்திருந்தது என்ற விடயம் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. 2021 அக்டோபர் 4ஆம் திகதி 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக 25 சந்தேக நபர்களுக்கு உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளன. கொழும்பு, கேகாலை மற்றும் புத்தளம் ஆகிய உயர் நீதிமன்றங்களில் வேறு எட்டு வழக்குகள் தொடர்பாகக் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பொரல்லை புனித அந்தோனியார் தேவாலயத்தில் 2022 ஜனவரி 11ஆம் திகதி இடம்பெற்ற ஒரு பாரதூரமான சம்பவம் குறித்து தேவாலயச் சமூகத்தினர் அண்மையில் மிகவும் மனக்கலக்கமடைந்திருந்தனர். நீதிக்கான இயக்கத்தின் ஒரு பாகமாக சர்வசமய நிகழ்வொன்று நடத்தப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் அந்த தேவாலயத்தில் வெடிக்காத கிரனைட் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. தேவாலயத்தில் இருந்த ஒரு சில ஆட்களை பொலிஸார் ஆரம்பத்தில் இது தொடர்பாகக் கைது செய்தனர். ஆனால், இது தொடர்பாக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் புலன் விசாரணைகள் வினைத்திறன் அற்றவை மற்றும் முழுமையற்றவை என விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

56. (முன்னைய அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்ட) வேறு பல குறியீட்டு ரீதியான வழக்குகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்குகள் நீதிமன்றங்களில் நீண்ட காலம் தாமதமடைந்திருக்கும் விடயம் குறித்து உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். ஆரம்ப குற்றப் பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு இப்பொழுது ஒரு தசாப்த காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கடந்து சென்றுள்ளது.[66] நீண்ட காலமாக நிலுவையிலிருந்து வரும் இந்த வழக்குகளை விலக்கிக் கொள்வதற்கென அண்மையில் சட்டமா அதிபர் தனது தற்றுணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தியமை இந்த அலுவலகத்தின் சுயாதீனம் குறித்தும், பொறுப்புக்கூறலை முன்னெடுக்கும் விடயத்தில் அரசாங்கத்தின் கடப்பாடு குறித்தும் பாரதூரமான கரிசனைகளை எழுப்புகின்றது. பெரும்பாலான வழக்குகளில் கடந்த வருடங்களின் போது பொதுவாக முன்னேற்றம் ஏற்படாத நிலை குறித்தும், ஒரு சில வழக்குகள் முனைப்பாக பின்நோக்கி சென்றிருப்பது குறித்தும் உயர் ஆணையாளர் பெருமளவுக்கு மனக்கிலேசமடைந்துள்ளார். அரச முகவர்கள் குற்றச் செயல்களுக்குக் குற்றம்சாட்டப்பட்ட நபர்களாக இருந்து வரும் சந்தர்ப்பங்களில் குற்றச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, தண்டனை பெற்றுக் கொடுப்பது

65 A/HRC/34/29, para 32.

66 See A/HRC/43/19, para 21 and A/HRC/46/20, paras 49-50.

தொடர்பான அரசாங்கத்தின் இயலாமை மற்றும் விருப்பமின்மை என்பவற்றை தொடர்ந்தும் இது சுட்டிக்காட்டுகின்றது.

## IV. பிரேரணை 46/1 இன் ஏனைய அம்சங்களை அமுல் செய்தல்

57. உள்நாட்டு பொறிமுறைகள் பொறுப்புக்கூறலை முன்னெடுத்து வரும் விடயத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லாத நிலையில் ‘‘தகவல் மற்றும் சான்றுகள் என்பவற்றை சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து, பாதுகாத்து வைப்பதற்கும், எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கு சாத்தியமான உத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் தொடர்பாக பரப்புரையை மேற்கொள்வதற்கும் தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் உறுப்பு அரசுகளை உள்ளடக்கிய விதத்தில் சம்பந்தப்பட்ட நீதித்துறை மற்றும் ஏனைய நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் OHCHR இன் ஆற்றலை பலப்படுத்துவது’’என பிரேரணை 46/1 தீர்மானித்தது.[67] பொறுப்புக்கூறல் தொடர்பான இந்தப் பணிப்பாணை OHCHR, மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகிய தரப்புக்களுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும், இலங்கையில் நிகழ்த்தப்பட்டிருக்கும் பாரதூரமான சர்வதேசக் குற்றச் செயல்கள் தொடர்பாகக் குறைநிரப்பு உத்திகளுக்கு ஊடாக பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கும் முக்கியமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

58. பிரேரணை 46/1 இன் இந்த அம்சங்களை அமுல் செய்யும் விடயத்தை 2021 ஏப்ரல் 21 தொடக்கம் ஒரு ஆரம்ப அணி ஆயத்த வேலைகளை முன்னெடுப்பதுடன் இணைந்த விதத்தில் இந்த அலுவலகம் (OHCHR) ஆரம்பித்துவைத்தது. அலுவலகம் இப்பொழுது அதிகளவிலான ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்திருப்பதுடன், அவர்கள் சர்வதேச குற்றவியல் மற்றும் மனிதநேயச் சட்டம், மனித உரிமைகள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்டையிலான வன்முறை, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் தகவல் முகாமைத்துவம் போன்ற துறைகள் தொடர்பான நிபுணர்களையும் உள்ளடக்குகின்றனர். எவ்வாறிருப்பினும், அணியின் பல்வேறு உறுப்பினர்கள் பணிகளை ஆரம்பிக்கும் திகதி 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு ஒதுக்கீடுகள் காரணமாக மேலும் தடைப்பட்டுள்ளது.

59. பிரேரணை 46/1 இன் கீழான பணிப்பாணை தொடர்பாக இந்த அலுவலகம் இணைய வழியூடாக அறிமுக விடயங்களைப் பிரசுரித்துள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட கேள்வி, பதில்கள் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது.[68]

60. அலுவலகம் e-discovery மென்பொருளைப் பயன்படுத்தி தகவல் மற்றும் சான்றுகள் காப்பகம் ஒன்றை அபிவிருத்தி செய்திருப்பதுடன், ஐ நா அமைப்பு ஏற்கனவே வைத்திருக்கும் பெருந்தொகையான தனிநபர் தகவல் உருப்படிகளையும் இனங்கண்டுள்ளது. மேலும் தகவல்களைக் கேசரிப்பதற்கான இடைவெளிகள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றை அடையாளம் காணும் நோக்கத்துடன் இந்த அணி தகவல்களைக் குற்றவியல் நீதிக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்யவும். பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட ஓர் அணுகுமுறையை உள்வாங்கி மேலும் பகுப்பாய்வு செய்யும். வைத்திருக்கும் தகவல்கள் மற்றும் சேகரிக்கப்படும் தகவல்கள் அரசு மற்றும் அரசு சாரா செயற்பாட்டாளர்கள் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

---

[67] A/HRC/RES/46/1, para 6.

[68] https://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/Sri-Lanka-accountability-project.aspx.

61. உயர் ஆணையாளரின் முன்னைய அறிக்கை பல்வேறு வழிமுறைகளுக்கு மத்தியில், உறுப்பு அரசுகள், பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை நிகழ்த்தியிருப்பதாக நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்படும் நபர்களுக்கு எதிராக இலக்குடன் கூடிய தடைகளை விதிக்கும் விடயத்தை பரிசீலித்து பார்க்க வேண்டும் எனப் பரிந்துரை செய்திருந்தது. பாரதூரமான அத்துமீறல்களில் சம்பந்தப்பட்டிருக்கும் இரு இலங்கை இராணுவ அதிகாரிகள், இராஜாங்கத் திணைக்களம், வெளிநாட்டு செயற்பாடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 7031(c), 2021 இன் கீழ் வகைப்படுத்தப்படுவார்கள் என்றும், அந்த நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்களாக இருந்து வருவார்கள் என்றும், 2021 டிசம்பர் 10ஆம் திகதி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அறிவித்தது.

62. இந்த விடயம் தொடர்பான மேலும் முன்னேற்றம் குறித்து உயர் ஆணையாளர் 2022 செப்டம்பர் மாதம் அறிக்கையிடுவார். அதே வேளையில், பிரேணை 46/1 இன் மூலம் இந்த அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் பணிகளின் அளவு கணிசமானதாக இருந்து வருகின்றது என்ற விடயம் ஏற்கனவே தெளிவாகத் தெரிகிறது. பணிப்பாணையின் முழுமையான அமுலாக்கத்திற்குப் போதியளவிலான மனித மற்றும் நிதி வளங்களுடன், உறுப்பு அரசுகளின் வினைத்திறன் மிக்க ஒத்துழைப்பும் அவசியமானதாகும்.

# V. முடிவுரைகள்

63. கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரித்தல் என்பன தொடர்பாகப் பொறுப்புக்கூறல் குறைவாக இருந்து வரும் நிலை குறித்து உயர் ஆணையாளர் கரிசனை கொண்டுள்ளார். கடந்த இரண்டு வருடங்களின் போது நீதித்துறையின் சுயாதீனம், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஏனைய முதன்மையான நிறுவனங்கள் என்பவற்றின் சுயாதீனம் குறைவடைந்து சென்றதுடன், மனித உரிமைகள் பரப்புரைகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஜனநாயக வெளி சுருங்கியுள்ளது. இராணுவமயமாக்கலை நோக்கிய மேலும் ஒரு நகர்வு இடம்பெற்றிருப்பதுடன், அரச நிறுவனங்களில் சிங்கள தேசியவாதம் மற்றும் பௌத்த மதம் என்பவற்றை வலியுறுத்தும் விடயம் பெருமளவுக்கு தென்படுவதுடன், சிறுபான்மைச் சமூகங்களின் புறமொதுங்கல் நிலை மற்றும் நிச்சயமற்ற நிலை என்பவற்றை அது அதிகரித்து, நல்லிணக்கத்தை உதாசீனம் செய்கின்றது. அடுத்து இடம்பெறவிருக்கும் அரசியல் யாப்பு வரைவைத் தயாரிக்கும் செயன்முறை முதன்மையான நிறுவனங்களின் சுயாதீனத்தை பொறுத்தவரையில் நிர்ணயகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதுடன், அதிகாரப் பகிர்வு மற்றும் மனித உரிமைகள் போன்ற விடயங்கள் மிகவும் உன்னிப்பான விதத்தில் கண்காணிக்கப்படுதல் வேண்டும். கொவிட் - 19 பெருந்தொற்றின் ஆழமான தாக்கம் காரணமாக நிலைமை மிகவும் மோசமடைந்திருப்பதுடன், பொருளாதார நெருக்கடி, பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளை அனுபவிக்கும் நிலையின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வந்துள்ளது. மேலும், அரசாங்கம் விமர்சனம் மற்றும் எதிர்ப்புச் செயற்பாடு என்பவற்றை கடுமையாக ஒடுக்கி வரும் நிலை சிவில் சமூகத்துக்கான வெளியைப் பலவீனப்படுத்தியுள்ளது. சிறுபான்மை சமூகங்கள் தொடர்பாக தற்பொழுது இடம்பெற்று வரும் புறமொதுக்கல் நிலை மற்றும் பாரபட்சம் என்பவற்றை பொருளாதார சரிவு மேலும் தூண்டக்கூடிய ஆபத்துக்களும் இருந்து வருகின்றன.

64. OHCHR உடன் தொடர்பு கொள்ளும் விடயத்தில் அரசாங்கம் அண்மையில் அதன் திறந்த தன்மையைப் புதுப்பித்துக் கொண்டிருப்பதுடன் இணைந்த விதத்திலான அண்மைக்கால சமிக்ஞைகளை உயர் ஆணையாளர் அங்கீகரிப்பதுடன், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான மாற்றங்களை உள்ளடக்கிய விதத்தில் ஒரு சில சீர்த்திருத்தங்களை எடுத்து வருவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆரம்ப நடவடிக்கைகளையும் உயர் ஆணையாளர் அங்கீகரிக்கின்றார். இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள்

கடப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதற்கும், பாரதூரமான அத்துமீறல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுப்பதற்கும் சட்ட, நிறுவன ரீதியான மற்றும் பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்கள் அவசியமாக இருந்து வருவதுடன், அரசாங்கம் இந்தச் சீர்த்திருத்தங்களை மேலும் அதிகளவிலும், ஆழமாகவும் மேற்கொள்ள வேண்டுமென ஆணையாளர் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறார். இந்தப் பாதையில் இலங்கைக்கு உதவி செய்வதற்கு OHCHR தொடர்ந்தும் ஆயத்த நிலையில் இருந்து வருகின்றது. நீதிமன்றங்களுக்கு சென்றிருக்கும் பெருந்தொகையான குறியீட்டு ரீதியான மனித உரிமை வழக்குகள் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வரும் இடையூறு மற்றும் பின்னடைவுகள் என்பன குறித்தும், உண்மை மற்றும் நீதி என்பவற்றைக் கோரி பிரச்சாரம் செய்து வரும் அல்லது தமது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்கு முன்வரும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரை துன்புறுத்துதல் என்பன குறித்து உயர் ஆணையாளர் ஆழமாக கரிசனை கொண்டுள்ளார். நல்லிணக்கத்திற்கான அடிப்படையாக இழப்பீடு மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பான நடைமுறை வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்தி வரும் அதே வேளையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி மற்றும் நிவாரணம் என்பவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கான அனைத்துமடங்கிய ஓர் அணுகுமுறை மற்றும் மீள் நிகழாமையை உத்தரவாதப்படுத்தும் நிறுவன ரீதியான சீர்த்திருத்தங்கள் என்பன இல்லாமல் இதனைச் சாதித்துக்கொள்ள முடியாது போகும் என்ற விடயத்தை உயர் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

65. ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கை அரசு சர்வதேசக் குற்றச் செயல்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை அத்துமீறல்கள் என்பவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கும் விடயத்தில் தொடர்ந்தும் தோல்வி கண்டிருப்பதுடன், வினைத்திறன் மிக்க நிலைமாறு கால நீதிச் செயன்முறை ஒன்றை அமுல் செய்யும் விடயத்திலும் தவறியிருக்கின்றது. அத்தகைய பாரதூரமான சர்வதேசக் குற்றச் செயல்களை அங்கீகரிப்பதற்கும், பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்குமான அதன் விருப்பமின்மையை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் எடுத்துக்காட்டி வந்துள்ளது. ஆனால், நிகழ்த்தப்பட்டிருக்கும் போர்க் குற்றங்கள் தொடர்பாக தொடர்புபடுத்தக்கூடிய ஒரு சில இராணுவ அதிகாரிகளை அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் உள்வாங்கியிருக்கின்றது. இது தண்டனை விலக்குரிமை குறித்த கதையாடல் ஒன்றை மீள வலியுறுத்துகின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உத்தரவாதப்படுத்தும் பயனுள்ள பெறுபேறுகள் இல்லாதவிடத்து, பொறுப்புக்கூறலையெடுத்து வருவதற்கென தொடர்ந்தும் சர்வதேச உத்திகளை மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்தல் வேண்டும்.

66. மனித உரிமைகள் பேரவை, அதன் விசேட நடைமுறைகள், ஒப்பந்த அமைப்புக்கள், சர்வதேச மற்றும் தேசிய சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசாங்கத்தின் சொந்த உள்நாட்டு ஆணைக்குழு – கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) – என்பன மனித உரிமைகள் நிலைமையை விருத்தி செய்வதற்கும், கடந்த கால வரலாறுகளைக் கவனத்திலெடுப்பதற்குமென அரசாங்கத்திடம் பல திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. அரசாங்கம் அதேபோல சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பன நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தும் விடயத்தில் இந்தப் பரிந்துரைகளை அளவுகோல்களாகப் பயன்படுதல் வேண்டும்.[69] இந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும், இது தொடர்பான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கும் OHCHR தயார்நிலையில் இருந்து வருகின்றது. சிவில் சமூக வெளி, சுயாதீனமான மற்றும் அனைத்தையும் உள்வாங்கிய நிறுவனங்கள் என்பவற்றை உத்தரவாதப்படுத்தி, முறைமைசார்ந்த தண்டனை விலக்குரிமையை முடிவுக்கு கொண்டு வந்தால் மட்டுமே இலங்கை நிலைத்து

[69] OL LKA (7.2021).

நிற்கக்கூடிய அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நிலையான நல்லிணக்கம் என்பவற்றை சாதித்துக் கொள்ள முடியும்.

## VI. பரிந்துரைகள்

67. **ஆணையாளர் பேரவைக்கான அவருடைய 2021 அறிக்கையின் 60ஆவது பந்தியில் இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்த பரிந்துரைகளை மீண்டும் வலியுறுத்துகிறார்.[70] மேலும், அரசாங்கம் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென அவர் பரிந்துரை செய்கிறார்:**

(a) **புதிய அரசியல் யாப்புக்கான வரைவு தயாரிப்புச் செயன்முறை பரவலான மற்றும் அனைவரையும் உள்வாங்கிய கலந்தாலோசனைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும், நீதித்துறை மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற முதன்மையான நிறுவனங்களின் சுயாதீனத்தை வேரூன்றச் செய்வதாகவும், அரசியல் அதிகாரப் பகிர்வை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாகவும் இருந்து வருவதனை உறுதிப்படுத்துதல். இது நல்லிணக்கத்திற்கும் இலங்கையின் குடித்தொகையில் அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் உள்ளார்ந்த ஒரு விடயமாக இருந்து வருகின்றது;**

(b) **மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகளினால் முன்வைக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளையும், வினைத்திறன் மிக்க, சுயாதீனமான மற்றும் அனைவரையும் உங்வாங்கும் தேசிய நிறுவனங்களுக்கு தேவைப்படும் உத்தரவாதங்களையும் அரசியல் யாப்பில் கவனத்தில் எடுத்தல் ;**

(c) **சிவில் விவகாரங்களை மேற்கொள்வதற்கு இராணுவத்தில் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்த்துக் கொள்ளல் மற்றும் சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் செல்வாக்கைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ;**

(d) **நடைமுறையில் சட்டமா அதிபர் திணைக்களம் சுயாதீனமாக செயற்படுவதற்கான இயலுமையைக் கொண்டிருப்பதனையும், மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பன தொடர்பாக குற்றமிழைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் - அவருடைய இராணுவ பதவி நிலை, உத்தியோகபூர்வ அல்லது ஏனைய அதிகார அந்தஸ்த்து என்னவாக இருந்து வந்தாலும் - வழக்குத் தொடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனை உத்தரவாதப்படுத்துதல் ;**

(e) **காணாமற் போயிருக்கும் ஆட்களுக்கு நேர்ந்திருக்கும் கதி மற்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கான அனைத்துமடங்கிய ஒரு அணுகுமுறை மேற்கொள்ளல்; பலவந்தமாக ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான இராணுவ சுவடிக் கூடங்களை உடனடியாக திறந்து வைத்தல்; பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக குற்றப் பொறுப்பைக் கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் அனைத்து நபர்கள் தொடர்பாகவும் சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொள்ளல்; மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அனைத்துமடங்கிய இழப்பீடுகளை வழங்குதல் ;[71]**

(f) **பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், வேறு எவரேனும் அரசு அல்லது அரசு சாரா செயற்பாட்டாளர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்ற விடயம் தொடர்பாக மேலும் சுயாதீனமான புலன் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும்**

---

70 HRC/46/20, para 60.

71 See A/HRC/33/51/Add.2, pages 17-22.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் முடிவுகளைப் பிரசுரித்தல் ;

(g) பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கையின் சர்வதேச சட்ட கடப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அச்சட்டம் தொடர்பாக மேலும் அடிப்படை இயல்பிலான சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்; அதே வேளையில், சர்வதேச விழுமியங்கள் மற்றும் தரநியமங்கள் என்பவற்றுடன் முழுமையாக இணங்கி ஒழுகும் ஒரு புதிய சட்டவாக்கத்தின் மூலம் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் வரையில், அச்சட்டத்தின் பாவனையை இடைநிறுத்தி வைத்தல் ;[72]

(h) பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து தடுப்புக் காவல் கைதிகள் தொடர்பாகவும் விரைவாக ஒரு மீளாய்வை மேற்கொள்ளல்; மற்றும் போதிய அளவிலான சட்ட அல்லது சான்று ரீதியான ஆதாரங்கள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் விடுவித்தல்; பயங்கரவாத எதிர்ப்பு வழிமுறைகள் ஜனநாயக மற்றும் சிவில் வெளியை உதாசீனம் செய்யாதிருப்பதனை உத்தரவாதப்படுத்துதல் ;

(i) பயங்கரவாத தடைச் சட்டம், சுயவிருப்பிலான சமூக சேவைகள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை) சட்டம், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் மற்றும் ஏனைய தனிப்பட்ட சட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் முதன்மையான சட்டங்களை வரைதல் மற்றும் திருத்தியமைத்தல் என்பவற்றின் போது அனைவரையும் உள்வாங்கிய விதத்தில் பரந்த அடிப்படையிலான கலந்தாலோசனையை உறுதிப்படுத்துதல்;

(j) அனைத்து வடிவங்களிலுமான தொடர் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் என்பவற்றை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறும், மனித உரிமைகள் பாதுகாவளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு எதிரான பழிவாங்கல் செயல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறும், அனைத்து பாதுகாப்பு முகவரகங்களுக்கும் கட்டளையிடுதல் ;

(k) காணிப் பிணக்குகளை வெளிப்படையான, கலந்தாலோசனை இயல்பிலான, பக்கச் சார்பற்ற, பாரபட்ச இயல்பைக் கொண்டிராத வழிமுறைகளில் நடுத்தீர்ப்புச் செய்து, சமய அமைவிடங்களை நிறுவும் விடயத்தில் சர்வ சமய உரையாடலை உறுதிப்படுத்துதல் ;

68. பேரவை மற்றும் உறுப்பு அரசுகள் என்பவற்றுக்கு உயர் ஆணையாளர் 2021ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கையின் பந்தி 61 இல் முன்வைத்திருக்கும் பரிந்துரைகளை மீள வலியுறுத்துவதுடன், அவை மேலும் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கின்றார்:[73]

(a) இலங்கையில் அனைத்து தரப்புக்களினாலும் நிகழ்த்தப்பட்டிருக்கும் சர்வதேசக் குற்றச் செயல்கள் தொடர்பாக உள்நாட்டு நியாயாதிக்கங்களில் நீதி நடைமுறைகளுக்கு ஊடாக புலன் விசாரணை செய்வதவற்கும், வழக்குத் தாக்கல் செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோருடன் ஒத்துழைத்தல் ; பிராந்தியத்திற்கு வெளியில் அல்லது அகிலம் தழுவிய ரீதியில் நியாயாதிக்கம் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளின் கீழ், பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை நிகழ்த்தியிருப்பதாக நம்பகமான விதத்தில் குற்றம் சாட்டப்படும் ஆட்களுக்கு எதிராக இலக்குகளுடன் கூடிய தடைகளை விதிக்கக்கூடிய சாத்தியப்பாட்டை ஆராய்ந்தறிதல் ;

(b) பழிவாங்கல்களை எதிர்கொண்டிருப்பவர்களைப் பாதுகாப்பதற்கென இலங்கை பிரஜைகள் தொடர்பாக தஞ்சம் வழங்கும் வழிமுறைகளை மீளாய்வு

---

72 OL LKA (7.2021).

73 A/HRC/46/20, para 61.

செய்தல்; மற்றும் சித்திரவதை அல்லது ஏனைய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் என்பன குறித்த உண்மையான ஆபத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் தஞ்சமடைந்திருப்பவர்களை பலவந்தமாக அவர்களது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பதனை தவிர்த்துக் கொள்ளல்;

(c) பிரேரணை 46/1 இன் கீழ் OHCHR இன் பொறுப்புக்கூறலுடன் சம்பந்தப்பட்ட பணிகளை நிறைவேற்றி வைப்பதில் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்; மற்றும் இந்தப் பிரேணையின் கீழ் அதற்கு வழங்கப்பட்டிருக்கும் முழுமையான பணிப்பாணையை வினைத்திறன் மிக்க விதத்தில் நிறைவேற்றி வைப்பதற்கு அதற்கு இயலுமையை வழங்கும் பொருட்டு போதிய அளவிலான மனித மற்றும் நிதி வளங்களை பெற்றுக்கொடுத்தல்.

69. ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென உயர் ஆணையாளர் பரிந்துரை செய்கின்றார்:

(a) சிவில் சமூக அமைப்புக்களுக்கான அச்சுறுத்தல்களை தடுப்பதற்கும், அவற்றுக்கான ஆதரவை அதிகரிப்பதற்கும் சிவில் சமூக வெளியை உறுதியான விதத்தில் பாதுகாத்துக் கொள்வதற்கும் தமது பாதுகாப்புப் பணிகளை அதிகளவில் முன்னெடுத்துச் செல்லல் ;

(b) பாதுகாப்புப் படைகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அல்லது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பவற்றின் கண்காணிப்பின் கீழ் வரும் அனைத்து அமைப்புக்களுடனுமான தொடர்புகளை மேற்கொள்ளும் பொழுது, கண்டிப்பான, ஒருமித்த விரிவாக்கப்பட்ட விதத்தில் மனித உரிமைகள் மீது உரிய கவனம் செலுத்துதல் மற்றும் அதன் கோட்பாடுகள் என்பவற்றை உத்தரவாதப்படுத்துதல்; மற்றும் அவற்றின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற சுயாதீனம் உதாசீனம் செய்யப்பட்டிருக்கும் கட்டமைப்புக்களுடனான அவற்றின் தொடர்புகளை மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய அமைப்புக்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்;

(c) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பின் (GANHRI) கரிசனைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு பரப்புரை செய்தல் ;

(d) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பின்னணியில், ஐக்கிய நாடுகள் சமாதானத்தை பராமரிக்கும் செயற்பாட்டின் பின்புலத்தில் இருந்து வரும் சவால்களை முழுமையாக புரிந்து கொள்ளும் அதே வேளையில், ஐக்கிய நாடுகள் சமதானத்தை பாரமரிக்கும் செயற்பாடுகளில் இலங்கையின் பங்களிப்புக்களை மீளாய்வு செய்தல் மற்றும் இலங்கை ஆளணியினரை வடிகட்டுவதற்கான முறைகளை மீளாய்வு செய்தல்.